24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 16
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 146 சித்திரை 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 23 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

தமிழ் – முஸ்லிம் இளைஞர்கள் கைகலப்பு 10

## கொச்சிக்கடையில் நேற்றும் வெடித்துச் சிதறியது வான்

### குண்டைச் செயலிழக்கச் செய்தபோது விபரீதம்

கொழும்பு, ஏப். 23
கொழும்பில் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் வெடிகுண்டு நிரப்பிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்த வான் வெடித்துச் சிதறியது. சிறப்பு அதிரடிப் படையின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர், வெடிகுண்டை செயலிழக்கச் செய்த போதே இந்த இடர் இடம்பெற்றது. இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.
ஈஸ்ரர் வழிபாட்டின் 12

## 290 அதிகரிக்கின்றன உயிரிழப்புக்கள்

கொழும்பு, ஏப்ரல் 23
இலங்கையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 290 ஆக் அதிகரித்துள்ளன என்று அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் தேவாலயங்களிலும், ஆடம்பர விடுதிகளிலும், நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் மேலும் 500 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.
நேற்றுமுன்தினம் மாலை 228பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த எண்ணிக்கை நேற்று அதிகரித்துள்ளது. (ஒ-5)

## தொடரும் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 23
பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நேற்று இரவு 8 மணியிலிருந்து இன்று அதிகாலை 4 மணிவரை நடைமுறைப்படுத்தப்பட்டது.
தொடர் குண்டுவெடி ப்புக்களை அடுத்து நேற்றுமுன்தி 11

## அவசரகாலச் சட்டம்

### நள்ளிரவில் இருந்து நடைமுறை

கொழும்பு, ஏப். 23
பயங்கரவாத தடைச்சட்டத்துடன் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகள் மாத்திரம் நேற்று நள்ளிரவு 12.00 மணி முதல் அவசரகால சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவது தொடர்பான அரசிதழ் அறிவித்தல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டுள்ளது. 12

## வெளிநாட்டவர்கள் 31 பேர் சாவு: 14 பேர் மாயம்

கொழும்பு, ஏப். 23
கொழும்பு நட்சத்திர விடுதிகளில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் 31 பேர் உயிரிழந்துள்ளமை நேற்று மாலை 7 மணிவரையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் வெளியிட் 11

## தேசிய துக்க நாள்

கொழும்பு, ஏப். 23
தேசிய துக்க நாள் இன்று கடைப்பிடிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளில் கொல் 11

## மக்கள் உசார்!

யாழ்ப்பாணம், ஏப்.23
கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் நடந்த குண்டுத் தாக்குதல்களை அடுத்து மக்கள் மத்தியில் அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. தமது பகுதிகளில் சந்தேகப்படுபவர்கள் தொடர்பில் அவர்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யும் சம்ப 12

## ஐ.எஸ்.ஐ.எஸ். கொண்டாட்டம்

கொழும்பு, ஏப்.24
இலங்கையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர்கள் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
நேற்றுமுன்தினம் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 290 பேர் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.
இந்தத் தாக்குதல்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படு 12

## 11 பேர் கைது

கொழும்பு, ஏப். 23
இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இதுவரை 24பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலி 11

## நாளை துக்க தினம் கூட்டமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23
பயங்கரவாத தாக்குதலை கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துக்கதினத்தை அறிவித்துள்ளது. நாளை 24 ஆம் திகதி 12

உள்ளே....
- தாக்குதல் தொடரலாம் -அமெரிக்கா
- முஜாகீர் அசாத் சாலிக்கு தொடர்பு - விமல்
- புலிகளுக்குத் தொடர்பில்லை
- பெற்றாவில் குண்டுகள் மீட்பு
- பொலிஸார் மறைத்து விட்டனர் - ராணுவத் தளபதி

பக்கம் - 04

## இன்ரபோல் இலங்கையில்

கொழும்பு, ஏப். 23
இலங்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் தொடர்பாக விசாரணைக்கு உதவ அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பன்னாட்டு பொலிஸ் புலனாய்வு (இன்ரபோல்) நிபுணர்கள் கொழும்புக்கு விரைந்துள்ளனர்.
அமெரிக்க புலனாய்வு அமைப்பான, எவ்பிஐ எனப்படும் சமஸ்டி விசா 12

## துப்பாக்கி ரவைகளுடன் தந்தை, மகன்கள் கைது

கொழும்பு, ஏப். 23
தியத்தலாவவில் வானூர்திப் படையினர் நேற்று நடத்திய சிறப்புச் சோதனை நடவடிக்கையில் துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டுள்ளன.
ரி56 ரக துப்பாக்கி ரவைகளும் மேலும் சில வெடிபொருள்களும் 12

## மர்மக் காரால் மன்னாரில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.23
மன்னார், உயிலங்குளத்தில் பிரதான வீதியில் நாள் முழுவதும், ஒளிச் 12

## எச்சரிக்கையை அலட்சியம் செய்த ஐ.ஜி. உடன் பதவி விலக வேண்டும்

### வலியுறுத்துகின்றார் ராஜித

கொழும்பு, ஏப். 23
குண்டுத்தாக்குதல்கள் சதித் திட்டத்தில் தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பினர் ஈடுபடுகிறார்கள் என்ற எச்சரிக்கையை தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் விடுத்திருந்தும், அது குறித்து 12

## பதவியை துறக்க வேண்டும் ரணில்

### மகிந்த வலிறுத்துகின்றார்

கொழும்பு, ஏப். 23
முப்பது ஆண்டுகள் போரை நிறைவுக்கு கொண்டுவந்த பின்னர் தற்போது பத்து ஆண்டுகளாகின்ற நிலையில் இவ்வாறான பேரிடர் இடம் பெற்றிருக்கின்றது. இதற்கு அரசு பொறுப்பேற்று பதவி விலக வேண்டும். எனது தலைமை இந்த நாட்டுக்குத் தேவையா? இல்லையா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அதற்கு தேர்தலை நடத்தவேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்தி வழிபாடு இடம் பெற்றது. காயமடைந்தவர்கள் 11

## தெமட்டகொடவில் உயிரிழந்தவர் தற்கொலைதாரியுடைய மனைவி!

கொழும்பு, ஏப்.23
தெமட்டகொட குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்த பெண் கிங்ஸ்பெரி ஹொட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவரின் மனைவி என்றும், குண்டுவெடிப்பில் உயிரிழந்த இரு சிறுமிகள் அவரது மகள்கள் என்றும் நேற்றுத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 12

உள்ளே....
- மனைவி குழந்தை இறப்பை ஏற்க மறுக்கும் கணவன்
- பிறந்தநாள் கொண்டாடச் சென்று இறந்த சோகம்
- தாமதத்தால் தப்பித்த நபர்
- தூக்கி வீசப்பட்ட சிறுமி உயிருக்கு போராட்டம்
- ஆராதனை நடுவே வந்தவரே தாக்கினார்
- உறவுகளைத் தேடும் சொந்தங்கள்

பக்கம் - 03

# இனி இப்படி நடக்காது

## பேராயரிடம் உறுதியளித்த அரச தலைவர் மைத்திரிபால



கொழும்பு, ஏப். 23

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற துபோல் கொடூர செயற்பாடுகளுக்கு நாட்டினுள் இனியும் இடம் கிடையாது, என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்புப் பேராயரின் உத்தியோக பூர்வ இல்லத்துக்குச் சென்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்தார்.

உயிர்த்த ஞாயிறு சமய வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போது கிறிஸ்தவ பக்தர்கள் முகம்கொடுக்க நேர்ந்த இந்த துன்பியல் நிகழ்வு குறித்து பேராயரிடம் தனது ஆழ்ந்த கவலைகளை தெரிவித்த அரச தலைவர், இந்த நிலைமைகளை கருத்திற் கொண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் பேராயருடன் கலந்துரையாடினார்.

எதிர்காலத்தில் நாட்டினுள் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அது தொடர்பில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாகவும் அரச தலைவர் மேலும் தெரிவித்தார்.

பேராயர் உள்ளிட்ட அனைத்து மதகுருமார்கள் மற்றும் தேவாலயங்களுக்கு பாதுகாப்பை கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தான் பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாகவும் அரச தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் பேராயரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக கோத்தபாய கூறியுள்ளார்.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இவ்வாறானதொரு தாக்குதல் நடக்கும் என்பதை தனது தந்தையார் கூறியதாக தற்போது தெரிவித்துள்ளார். இதனை முன்னரே கூறியிருந்தால் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை நிறுத்தியிருப்போம். நாட்டின் புனவாழ்வுச் சேவையை பலவீனமாக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று பேராயர் கர்தினால் கூறியுள்ளார். (ஓ.5.31)

## தாக்குதல்தாரியின் அறையில் குர் ஆனும், கொத்து ரொட்டியும்

கொழும்பு, ஏப். 23

தொடர் குண்டுத் தாக்குதலாளிகள் தங்கியிருந்த ஹோட்டல் அறையிலிருந்து கொத்துரொட்டி பார்சல், அல்குரான் புனித நூல் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறியுள்ளனர். அவற்றை செய்தியாளர்கள் சிலரை அழைத்துச் சென்று காண்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தேவாலயங்கள் சொகுசு விடுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பையடுத்து தீவிர விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார், செய்தியாளர்கள் சிலரை ஷங்ரி லா ஹோட்டலுக்கு நேற்றுமுன்தினம் அழைத்துச் சென்றனர்.

**மறைகாணி ஆதாரங்கள்**

616 ஆம் இலக்க அறையில் தங்கியிருந்த இரண்டு சந்தேக நபர்கள் சி 4 ரக குண்டை எடுத்துக் கொண்டு மூன்றாம் மாடியில் உள்ள உணவகத்துக்கு வந்து ஒருவர் அதனை வெடிக்கச்செய்தார். மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடும்போது மற்றவர் மற்றயதை மின் தூக்கிக்கருகில் (லிப்ட்) வெடிக்கச் செய்தார் என்று மறைகாணிகளின் (சி சி ரி வி) உதவியுடன் செய்தியாளர்களிடம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருந்த அறையில் கொத்து ரொட்டி பார்சல் ஒன்று இருந்துள்ளது. அல் குரான் புனித நூல் ஒன்றும் இருந்துள்ளது. இவர்கள் வெளிநாட்டவர்களா என்பதை ஆராய்கிறோம் என்று பொலிஸார் கூறியுள்ளனர். அது பற்றிய முழுமையான விவரங்களைச் சேகரித்து வருகிறோம் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

**கடலில் பாதுகாப்பு**

சந்தேகநபர்கள் எவரும் தப்பிச் செல்லாத வகையில் கடற்பகுதிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வானூர்தி நிலையத்தில் சோதனைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)





## ரணிலும், ட்ரம்பும் நேற்று தொலைபேசியில் பேச்சு


இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அலைபேசியில் நேற்று மாலை உரையாடியுள்ளார். பன்னாட்டுப் பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவும் என்று ட்ரம்ப் குறிப்பிட்டதாக, தலைமை அமைச்சர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ.5)

## இலங்கை கடல் எல்லையில் இந்தியா உசார் நிலையில்

கொழும்பு, ஏப். 23

இலங்கை கடல் எல்லையில் இந்திய கடலோர காவற்படை உசார்நிலையில் ரோந்து பணியை மேற்கொள்கிறது. இலங்கையில் நடந்த கொடூரமான தாக்குதல் உலகையே உலுக்கியுள்ளது. இந்த நிலையில் இலங்கை கடல் எல்லையில் இந்திய கடலோர பொலிஸார் உசார் நிலையில் ரோந்துப் பணியை மேற்கொள்கிறது.

தற்கொலைத் தாக்குதலை நடத்த திட்டமிட்டவர்கள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குள் வருவதை தடுக்கும் வகையில் கண்காணிப்பு தீவிரமாக உள்ளது. (ஓ.5)




## இலங்கை வருவோருக்கு பன்னாடுகள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களால் உலகின் பல்வேறு நாடுகளும் தமது குடிமக்களுக்கு கடுமையான பயண எச்சரிக்கையை விடுத்துள்ளன.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பயண எச்சரிக்கையை விடுத்துள்ளன.

இலங்கையில் தற்போது நீங்கள் தங்கியிருந்தால் உள்ளூர் பாதுகாப்பு தரப்பு மற்றும் ஹொட்டல் பாதுகாப்புத் தரப்பு அல்லது உங்களது கம்பனிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். வானூர்தி நிலையம் செயற்படக்கொண்டிருக்கிறது. பாதுகாப்புச்சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சில வானூர்தி நிறுவனங்கள் முன்கூட்டியே வானூர்தி டிக்கெட் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளன. இலங்கையில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஊரடங்குச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (தற்போது தளர்த்தப்பட்டுள்ளது) இந்த நிலைமைகளில் உங்களது செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்று பிரிட்டன், இலங்கையிலுள்ள தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்து விட்டது. மேலும் தாக்குதல் நடக்கலாமென்று கனேடிய அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போதைய உயர்மட்ட ஆபத்துக் காரணமாக இலங்கைக்குப் பயணம் செய்ய வேண்டுமா என்பது பற்றி தீவிரமாகச் சிந்திக்குமாறு ஆஸ்திரேலியா தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (த)

## இறந்தோரின் விசாரணைகளை துரிதமாக நடத்துமாறு பணிப்பு

கொழும்பு, ஏப். 23

நாட்டின் பல்வேறு பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் கொல்லப்பட்டவர்களின் இறப்பு விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு திடீர் இறப்பு விசாரணையாளர்களிடம் கோரியுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்களை மிகவிரைவில் உறவினர்களுக்கு ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (த)

## குண்டுத் தாக்குதல் அச்சத்தால் நட்சத்திர விடுதிகள் கதவடைப்பு

கொழும்பு, ஏப். 23

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களையடுத்து, கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஆடம்பர விடுதிகள் பல தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கொழும்பு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிங்ஸ்பெரி, சினமன் கிராண்ட், ஷங்ரிலா விடுதிகள் உள்ளிட்ட 8 இடங்களில் நேற்று முன்தினம் குண்டுகள் வெடித்திருந்தன. 290க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தக் குண்டுவெடிப்புகளால் விடுதிகளுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டன. உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டனர்.

**இராணுவ பாதுகாப்பு**

இதையடுத்து கொழும்பு நகரிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதிகள் பல தற்காலிகமாக மூடப்பட்டன. பெரும்பாலான விடுதிகளின் முன்பாக ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை, புதிய விருந்தினர்களை விடுதிகளில் அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தற்காலிகமாக மூடப்பட்ட விடுதிகளின் முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதிகளில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகள் சில தற்கொலைக் குண்டுதாரிகளால் மேற்கொள்ளப்பட்டன என்றும், குண்டுதாரிகள் அந்த விடுதிகளில் தங்கியிருந்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளதை அடுத்தே, இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**ஒருவர் பெயரிலேயே அறைகள் பதிவு**

அறைகளை முன்பதிவு செய்த ஒரே நபர் கொழும்பில் குண்டுகள் வெடித்த மூன்று விடுதிகளிலும் ஒரு பெயருடைய நபரே, அறைகளை வாடகைக்கு பதிவு செய்திருப்பது தெரியவந்துள்ளது.

அவர் ஒரே பெயரில், ஒரே அடையாள அட்டையைப் பயன்படுத்தியே விடுதிகளில் தங்குவதற்கு அறைகளை வாடகைக்கு எடுத்துள்ளார் என்பதை சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். முகமட் அஸ்ஸம் முகமட் என்பவரே அறையைப் பதிவு செய்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## மேதினக் கூட்டங்கள் நிறுத்தம்

நாட்டில் 8 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்தும் அவற்றில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலிசெலுத்தும் முகமாகவும் மலையகத்தின் முதன்மையான இரண்டு தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்ரஸின் மேதின கூட்டமும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் மேதின கூட்டமுமே நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, கொழும்பு நகர சபை மைதானத்தில் மே முதலாம் திகதி நடப்பிலிருந்த ஐ.தே.கவின் மேதினக் கூட்டமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (த)

# ஆராதனை நடுவே வந்தவர் குண்டை வெடிக்க செய்தார்

## நீர்கொழும்புத் தாக்குதலில் தப்பியவர் வாக்குமூலம்

*கொழும்பு, ஏப். 23*

*ஈஸ்ரர் வழிபாட்டின் நிறைவில், நன்றி ஆராதனை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென நுழைந்த நபர், ஆலயத்தின் மையப் பகுதிக்கு வேகமாக வந்து தனது உடலில் கட்டியிருந்த ஜக்கெட்டை அழுத்தி குண்டை வெடிக்க வைத்தார்.*

நீர்கொழும்பு கட்டுவபிட்டி புனித செபஸ்ரியான் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டு வெடிப்பை நேரில் கண்ட 60 வயதான ஒருவர் இவ்வாறு விவரித்துள்ளார்.

"நாங்கள் வழமையாக வீட்டுக்கு அருகில் உள்ள தேவாலயத்துக்கு வழிபடச் செல்வோம். செபஸ்ரியான் ஆலயம் அண்மையில்தான் மறுசீரமைக்கப்பட்டு திறக்கப்பட்டது. அந்த ஆலயத்துக்குச் செல்லவேண்டும் என்று மனைவி தான் தொடர்ச்சியாகக் கேட்டு வந்தார். ஈஸ்ரர் பெருநாளில் அங்கு வழிபடச் சென்றோம்.

ஆலயத்தின் மையப் பகுதியில் நானும் மனைவியும் வழிபட்டுக் கொண்டிருந்தோம். அப்போது நன்றி ஆராதனை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. திடீரென எங்களுக்கு பின்பக்கமாக ஒருவர் வந்தார். மையப் பகுதியில் நின்ற எங்களுக்கு அருகில் வந்து நின்றார். நன்றி ஆராதனை வழிபாடுகள் நடத்திய அருட்தந்தையரும் தனது வழிபாட்டை நிறுத்தினார். பூசை முடிவடையும் நேரத்தில் ஒருவர் ஆலயத்தின் நடுப் பகுதிக்கு வந்தது அருட்தந்தைக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அதனால்தான் அவர் வழிபாட்டை நிறுத்தினார். அந்தக் கணப்பொழுதில், தனது ஜக்கெட்டை எடுத்து ஏதோ அழுத்த பெரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. நானும் மனைவியும் தூக்கி வீசப்பட்டோம் - என்றார். (ஒ.5)

# வெடி குண்டுகளுக்கு மதங்களை தெரியாது

## *சினமன் ஹொட்டல் பணியாளர்களான 4 மதத்தவர்களும் குண்டுவெடிப்பில் சாவு*



கொழும்பு, ஏப். 23

கொழும்பு சினமன் கிராண்ட் ஹொட்டலில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில், அங்கு பணிபுரியும் நால்வர் உள்ளடங்குகின்றனர். இவர்கள் நான்குபேரும் இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாமிய மதத்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சாந்தா, சஞ்சீவனி, இப்ராகிம், நிசார் ஆகியாரே அவர்கள். அவர்களில் சஞ்சீவனி சமையற்கட்டில் பணிபுரிபவரெனவும் ஏனைய மூவரும் உணவு பரிமாறுபவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# குண்டு வெடிப்பால் வீசப்பட்ட சிறுமி உயிருக்கு போராட்டம்

கொழும்பு, ஏப். 23

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தூக்கி எறியப்பட்ட 5 வயதுச் சிறுமி, கொழும்பு தேசிய மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

வத்தளையைச் சேர்ந்த தமிழ்க் குடும்பத்தினர், கிறிஸ்தவப் பெருநாளின்போது கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்துக்கு வழிபடச் செல்வது வழமை. தந்தையும், 10 வயது மற்றும் 5 வயதுச் சிறுமியும், தந்தையின் தாயுமாக 4 பேரும் ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். தாயார், உறவினர்கள் மருத்துவமனையில் இருப்பதால் அவர்களைப் பார்க்கச் சென்று விட்டார்.

ஆலயத்தின் நடுப்பகுதிக்கு அண்மையாக இருந்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். தந்தையின் இடதுபக்கம் மகனும், வலது பக்கம் மகளும் அவருக்கு அருகில் தந்தையின் தாயும் இருந்துள்ளனர். அவர்கள் இருந்த இடத்துக்கு பின்பாக திடீரென குண்டுவெடித்துள்ளது. தந்தை உடனே சுதாகரித்து மகனையும், மகளையும் சுவருடன் அணைக்க முற்பட்டபோது, மகள் தூக்கி எறியப்பட்டுள்ளார். அவர் கீழே விழுந்தபோது, அவரது சகோதரான 10 வயதுச் சிறுவன் ஓடிச் சென்று கட்டிப் பிடித்துள்ளான். சிறுமியின் காதிலிருந்து குருதி வழிந்தோடியுள்ளது. நோயாளர் காவு வண்டி ஊடாக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளார். சிறுமிக்கு உயிருக்கு ஆபத்தான நிலமையில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. (ஒ.5)

# உணவருந்த தாமதித்ததால் உயிர் தப்பிக்கொண்ட நபர்

கொழும்பு, ஏப். 23

நான் காலை உணவை சாப்பிட செல்வதற்கு சிறிது நேரம் தாமதித்து இருக்காவிட்டால், நானும் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்திருப்பேன். இவ்வாறு பிரிட்டன் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரியும் கிரென் அரசரத்னம் தெரிவித்தார்.

இலங்கையில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடங்களில் கொழும்புவிலுள்ள சாங்ரிலா நட்சத்திர விடுதியும் ஒன்று. குண்டு வெடித்த சமயத்தில் விடுதியின் 18ஆவது மாடியில் இருந்த தான் இடி விழுந்ததை போன்ற சத்தத்தை கேட்டு கீழே ஓடி வந்ததாக கூறுகிறார் கிரென் அரசரத்னம்.

தற்போது 41 வயதாகும் அரசரத்னம் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனுக்கு ஏதிலியாகக் குடிபெயர்ந்தவர்.

'எல்லோரும் கடும் பீதியில் உறைந்தார்கள். விடுதியின் ஒரு பகுதி முழுவதும் குருதியாகக் காணப்பட்டது. என்ன நடந்தது என்று தெரியாமல் அனைவரும் பதற்றத்தில் ஓடியபடி இருந்தனர்' என்று அரசரத்னம் கூறுகிறார்.

'சாப்பிடச் செல்வதற்கு முன்னர் ஏதோ நெருடலான உணர்வு இருந்ததால், மீண்டும் என்னுடைய அறைக்கு சென்று டெபிட் கார்டை எடுப்பதற்குள் குண்டுவெடிப்பு சத்தம் கேட்டது. நான் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையிலிருந்து ஏதிலியாக பிரிட்டன் சென்றேன். ஆனால், இப்படியொரு சம்பவத்தை மீண்டுமொருமுறை பார்ப்பேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை' என்று அவர் மேலும் கூறுகிறார். (ஒ.5)

# உறவினர்களை தேடியலையும் யாழ்ப்பாணத்து சொந்தங்கள்

கொழும்பு, ஏப். 23

கொழும்பில் பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் சிலரை நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாகத் தெரிவித்து அவர்களது உறவினர்கள் தேடியலைந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் கொழும்பில் தங்கியிருந்து பணியாற்றுகின்றனர். கொச்சிக்கடைப் பகுதியில் அதிகளவானவர்கள் இவ்வாறு தங்கியுள்ளனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டாருடன் அவர்கள் இறுதியாகக் கதைத்துள்ளனர். அதன் பின்னர் அவர்களது தொடர்பு கிடைக்க்வில்லை. கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றிருந்தமையால் அதில் சிக்குண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில், மருத்துவமனைகளில் அவர்களைத் தேடி அலைந்தனர் உறவினர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள், கொழும்பு தேசிய மருத்துவமனையில் தமது உறவுகளை நேற்றுத் தேடி அலைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# மனைவி உயிரிழந்ததை ஏற்க மறுக்கும் கணவன்

## 3வயதுக் குழந்தையும் சகோதரிகளுமாக குடும்பமே கொழும்பு மருத்துவமனையில்

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிக்குண்டு மனைவி உயிரிழந்ததை கணவன் ஏற்க மறுத்துள்ளார். தனது மனைவி உயிருடன் தான் இருக்கின்றார் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். அவரது 3 வயது குழந்தை, அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றிலும், அவரது இன்னொரு சகோதரியான சிறுமி மற்றொரு அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும், மற்றொரு சிறுமி விபத்துச் சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஈஸ்ரர் பெருநாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை, நீர்கொழும்பு கட்டுவபிட்டி புனித செபஸ்ரியான் ஆலயத்தில் வழிபாட்டுக்கு கணவன், மனைவி, 3 குழந்தைகள் சென்றுள்ளனர். குடும்பத்தினரை ஆலய வழிபாட்டில் விட்டுவிட்டு, கணவன் வெளியில் சென்றுள்ளார். அந்த நேரத்தில் குண்டு வெடித்துள்ளது. மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். குழந்தைகள் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மனைவி உயிரிழந்ததை கணவனிடம் மருத்துவர்கள் தெரிவித்தபோதும் அவர் அதனை ஏற்க மறுத்து, மனைவியை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். (ஒ.5)

# பிறந்தநாள் கொண்டாடச் சென்று குண்டுவெடிப்பில் சிக்கிய தம்பதி

கொழும்பு, ஏப். 23

கொழும்பில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும், திருமணமாகி சில மாதங்களேயான தம்பதியர் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக சங்கரில்லா விடுதிக்குச் சென்ற நிலையில் குண்டுவெடிப்பில் சிக்கியுள்ளனர். கணவர் படுகாயமடைந்த நிலையில் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மனைவியின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு சங்கரில்லா விடுதிக்கு தம்பதியராகச் சென்றுள்ளனர். இதன்போதே குண்டுவெடிப்பில் சிக்கியுள்ளனர். கணவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். குண்டு வெடிப்பால் அதிர்சியடைந்த மனைவி நேற்றுமுன்தினம் முழுவதும் அதிலிருந்து மீளவில்லை. நேற்றைய தினம் இயல்பு நிலைக்குத் திரும்பினார்.

விடுதியில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் மருத்துவமனைக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நானும் கணவரும் சங்கரில்லா விடுதிக்கு காலை 8.20 மணியளவில் சென்றிருந்தோம். காலை உணவு வழங்கப்படும் மண்டபத்தில் நானும் கணவரும் ஒரு மேசையில் அமர்ந்தோம். எங்கள் மேசைக்கு அருகில், அந்த மண்டபத்தின் நடுப் பகுதியில் இரண்டுபேர் வந்து அமர்ந்தார்கள். அவர்களைப் பார்க்கவே வித்தியாசமாக இருந்தது. அதை கவனித்தோம். ஆனாலும் பேசாமல் சாப்பிடத் தொடங்கினோம். அவர்கள் இருவரின் நடவடிக்கைகளும், அந்த விடுதிக்கு வழமையாக வருபவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை போல் இருக்கவில்லை. அந்த இடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த பெரும்பாலானவர்கள் அதனை உணர்ந்திருந்தனர். எல்லோரது கண்களும் அவர்கள் இருவரின் பக்கம் திரும்பத் தொடங்கியது. அந்தக் கணத்தில் ஒருவர் மாத்திரம் கதிரையை இழுத்துவிட்டு எழுந்தான். தனது பையைத் திறந்து ஏதோ செய்ததுதான் தாமதம், பெரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. எனது கணவர், சடுதியாக என்னை மேசையின் கீழே தள்ளி எனக்கு கவசமாக படுத்தார். பத்து அல்லது பதினைந்து செக்கன்களுக்குள் சத்தம் தணிந்ததும் நாங்கள் எழுந்து மெல்ல வெளியே செல்ல முயன்றபோது அடுத்த குண்டு வெடித்தது. கணவர் என்னை கட்டிப் பிடித்து கவசமாக இருந்தமையால், அவருக்கு காயம் ஏற்பட்டது, என்றார் அந்தப் பெண். (ஒ.5)

# புலனாய்வுத் தகவல்களை பொலிஸார் பகிரவில்லை

## ராணுவத் தளபதி பகீர் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஏப். 23**
**தொடர் தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக முன்னரே விடுக்கப்பட்ட எச்சரிக்கை தொடர்பில் பொலிஸார், இராணுவத்தினருடன் எந்தவொரு தகவலையும் பகிரவில்லை என்று, இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.**

இலங்கையில் ஈஸ்ரர் பெருநாளில் தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகளை இலக்கு வைத்து தொடர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 300பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இந்தத் தொடர் தாக்குதல் தொடர்பில், அரச தேசிய புலனாய் வுச் சேவை எச்சரித்துள்ளது.

அரச புலனாய்வுச் சேவையின் எச்சரிக்கை தொடர்பில் இராணுவத்துக்கு எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்று இராணுவத் தளபதி குற்றம் சுமத்தியுள்ளார். இதேபோன்றதொரு குற்றச்சாட்டை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)



## முஜிபுர் ரஹ்மான், அசாத் சாலி குண்டு வெடிப்போடு தொடர்பு

### விமல் எம்.பி. பரபரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.23
கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களோடு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோருக்குத் தொடர்பு உண்டு என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:
கைது செய்யப்பட்டவர்களில் அல்ஹாஜ் மொஹமட் யூசுப் என்ற நபர் ஒருவர் உள்ளார். இவர் 2015ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப்பட்டிலில் பெயரிடப்பட்டிருந்தவர். அவருடைய மகன் தான் தற்கொலை குண்டுத் தாக்குதலை முன்னெடுத்துள்ளார். இவர் பிரபல வர்த்தகர் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் மேல்மாகாண ஆளுநர் அசாத்சாலி ஆகியோருடன் நெருங்கிய நட்பையும் கொண்டிருக்கின்றார். உங்களுக்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றேன். புத்தளத்தில் தற்கொலை குண்டுகள் பெரும் எண்ணிக்கையில் கைப்பெற்றப்பட்டபோது, கைது செய்யப்பட்டவர்கள் யார்?. அதில் ஒரு சிலர் உயர்மட்ட அழுத்தத்தால் விடுவிக்கப்பட்டார்களா என்ற வினாவை நாடாளுமன்றத்தில் நான் தொடுத்தேன்.

அப்பொழுது முஜிபுர் ரஹ்மான் குழப்படைந்து எழுந்து என்னைக் கேலி செய்து வேடிக்கையாகப் பதிலளித்தார். ஆகவே ஏற்கனவே இந்த விடயங்கள் தொடர்பில் அறிந்திருக்கின்றார். அது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்காது, நடவடிக்கை எடுக்காது இருப்பது ஏன்? அதற்குரிய பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்- என்றார்.

(எ-61)

## பெற்றாவில் குண்டுகள் மீட்கப்பட்டன

கொழும்பு, ஏப். 23
கொழும்புபுறக்கோட்டை பெற்றாவில் சிறப்பு அதிரடிப்படையால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 87 டெடனேட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தனியார் பேருந்து நிலையத்தில் 12 டெடனேட்டர்களும் அங்கு குப்பை குவிக்கப்பட்ட இடத்தில் 75 டெடனேட்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இலங்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் வெடிக்காத நிலையில் குண்டுகள் மீட்கப்படுகின்றன. (ஒ.5)

## குண்டு வெடிப்பில் இறந்தோரின் குடும்பங்களுக்கு ரூ. 10 இலட்சம்

கொழும்பு, ஏப். 23
குண்டு வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்காக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் அதே வேளை காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(ஒ.5)

## தாக்குதல் தொடரலாம் அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 23
இலங்கையின் பல இடங்களில் நடந்த குண்டுவெடிப்புத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு மீண்டும் இதேபோன்ற தாக்குதல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாக அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

'தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளது. அவர்கள் சுற்றுலாத் தலங்கள், அரசுப் போக்குவரத்து வாகனங்கள், விற்பனை அங்காடி, ஹோட்டல்கள், வானூர்தி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றில் தாக்குதல் நடத்தப்படலாம்' என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## குண்டு வெடிப்புக்களுடன் புலிகளுக்கு தொடர்பில்லை

### அரச தலைவரின் ஆலோசகர் சிரால் லக்திலக தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23
இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு பன்னாட்டு தீவிரவாத அமைப்புகளே காரணம். இந்தச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வாறு அரச தலைவரின் ஆலோசகர் சிரால் லக்திலக தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இதற்கும் தொடர்பு இருக்க வாய்ப்பு இல்லை. இறுதிப் போர்க் காலத்தில் கூட இது போன்ற தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவில்லை.

2011ஆம் ஆண்டு நைஜீரியாவிலும், 2018ஆம் ஆண்டு பாகிஸ்தானிலும் கிறிஸ்தவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களைப் போலவே இந்தத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. (ஒ.5)

## ஊரடங்கு நேரம் நடமாடியவர் கம்பி எண்ணுகிறார்

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் நெல்லியடி நகரில் வீதியில் மதுபோதையுடன் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை இரண்டு நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. நேற்று மாலையிலிருந்து காலைவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நெல்லியடியைச் சேர்ந்த 32 வயதுடைய குடும்பத் தலைவர் கைதுசெய்யப்பட்டார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்டார். நாளைவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (கு-26)

## நாடாளுமன்று இன்று கூடும் ரணில், மகிந்த உரையாற்றுவர்

கொழும்பு, ஏப்.23
நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. இதன் போது தொடர் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் செலுத்தப்படவுள்ளதுடன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்சவும் மட்டும் உரையாற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தை இன்று கூட்டுவதா இல்லையா என்பது குறித்து நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கட்சித்தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தொடர்பின் செயற்பாடுகள் தொடர்பில் மேற்படி கூட்டத்தில் அதிருப்திகள் வெளிப்படுத்தப்பட்டதோடு நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படாத தரப்பினர் தொடர்பிலும் பேசப்பட்டது என்று அமைச்சர் மனோகணேசன் குறிப்பிட்டார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், பொலிஸ்மா அதிபர் நடந்த சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளித்தார். இதன் பின்னர் நாடாளுமன்றம் நாளை (இன்று) கூட்டப்படவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது என்று மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (எ-31)

## காத்தான்குடியில் சுற்றிவளைப்பு வர்த்தகர் கைது

### *சங்கரில்லா ஹோட்டல் தாக்குதலுடன் தொடர்பு?*

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் இரவு திடீர் சுற்றிவளைப்பின்போது ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து வந்த சிறப்புப் புலனாய்வுக் குழுவொன்றே அதிரடிப்படையினருடன் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டது. சங்கிரிலா ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபரின் மனைவியின் சகோதரனே கைது செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில்.இந்த கொடூர தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ.5)

## பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இன்று தீர்மானம்

கொழும்பு, ஏப். 23
பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக இன்று தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரிய வசம் தெரிவித்தார்.

பாடசாலைகள் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட இருந்தன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெடிப்பு சம்பவங்களை அடுத்து பாடசாலைகளுக்கு நேற்றும், இன்றும் விடுமுறைத் தினமாக கல்வி அமைச்சு அறிவித்திருந்து.

பாடசாலைகள் மீண்டும் எப்பொழுதும் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்ததுடன் நிலைமைகளை கவனத்தில் கொண்டு பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (ஒ.5)

# அவரது நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டது இப்படிச் செய்வார் என நினைக்கவில்லை

## சீயோன் தேவாலய ஊழியரின் அனுபவம்

கொழும்பு, ஏப்.23

அவரை பார்த்தபோது எந்த வித்தியாசமும் தெரியவில்லை. சிரித்தபடி, சந்தோசமாக நின்றார். எனினும், அவரது நடவடிக்கையில் எமக்கு சந்தேகமாக இருந்தது இவ்வாறு மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தியவர் பற்றி விவரித்துள்ளார் அந்தத் தேவாலயத்தின் ஊழியரில் ஒருவர்.

மட்டக்களப்பில் சீயோன் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் 27 பேர் உயிரிழந்தனர். 100 பேர் வரையில் காயமடைந்தனர். இதில் துயரமான விடயம் உயிரிழந்தவர்களில் 14 பேர் மாணவ பிஞ்சுகள். தேவாலயங்களில் நடைபெறும் ஞாயிறு வகுப்பின் பின்னர் விளையாடிக் கொண்டிருந்தவர்களே உயிரிழந்தனர். தேவாலயத்தில் ஒரு தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்திருந்தார்.

அந்தச் சம்பவத்தின்போது அங்கிருந்த தேவாலய ஊழியர் ஒருவர் தனது அனுபவத்தை இணையத்தளம் ஒன்றுடன் பகிர்ந்துள்ளார்.

"காலை 8.40 அளவில் இருக்கும். தேவாலயத்தின் வாசல் பக்கமாக ஒருவர் நின்று கொண்டிருந்தது எனது கவனத்தை ஈர்த்தது. அவர் நீண்டநேரமாக நிற்கிறார். அவரிடம் சென்று உள்ளே வாருங்கள் என அழைத்தேன். அவர் நாசூக்காக மறுத்தார். அவர் புதியவர். வழக்கமாக தேவாலயத்துக்கு வருபவர் அல்லர். தேவாலயத்துக்கு வருபவர்கள் வெளியில் நிற்காமல், உள்ளே கூட்டிச்சென்று அமர வைப்போம். இன்றும் அதற்குத்தான் முயன்றோம். அந்த அழைப்பை அவர் ஏற்கவில்லை.

எனக்கு சில தொலைபேசி அழைப்புக்கள் வரும். நான் அவற்றை பேசிவிட்டு, புறப்பட்டு விடுவேன். அதற்கு முன்னர் ஆராதனை நடந்தால் கலந்து கொள்ளலாம். எத்தனை மணிக்கு ஆராதனையை தொடங்குவீர்கள்? என்று அவர் கேட்டார்.


9 மணிக்கு ஆராதனை தொடங்குமென்று கூறி, மீண்டும் உள்ளே வருமாறு அழைத்தேன். அவர் அப்போதும் மறுத்தார். அவரது மறுப்பு தனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. 35 வயதுக்குட்பட்ட நபர். செந்தழிப்பான தோற்றமுடையவர். சிரித்த முகத்துடனேயே இருந்தார். ஓரளவு உடம்பானவர். திடகாத்திரமானவர். அவரது நடத்தையில் சந்தேகம் இருந்தது. ஆனால் இப்படியொரு காரியம் செய்வார் என நான் நினைக்கவில்லை. பெயரைக் கேட்டேன். ஓட்டமாவடியில் இருந்து வருவதாகவும், பெயர் உமர் என்றும் சொன்னார்.

அந்த புதிய நபர், வந்து நின்ற இடம் தேவாலய வழிபாட்டு மண்டபத்தின் நடுப்பகுதிக்குள் நுழைய வசதியான வாசல் பக்கம். அந்த வாசலால் நுழைந்தால், தேவாலயத்தின் நடுவில் செல்லலாம். வழிபாட்டிற்கு வருபவர்கள் குழுமிய பின்னர், தேவாலயத்தின் நடுப்பகுதியில் குண்டை வெடிக்க வைக்கப்பதுதான் அவரது திட்டமாக இருந்திருக்க வேண்டும்.

அவர் ஒரு ரவலிங் பையொன்றை பக்கவாட்டாக கொழுவியிருந்தார். இன்னொரு சிறிய பையொன்றை முன்பக்கமாக கொழுவியிருந்தார். நான் அழைத்தும், அந்த நபர் உள்ளே வராதநிலையில், ஆலயத்தின் இளம் மத போதகர்கள் சிலர் வந்து அவரை விசாரித்தனர். இந்த சமயத்தில் அங்கிருந்து நான் அகன்றேன். அதன்பின்னர் அங்கு நடந்தவற்றைத் தெளிவாகக் காணமுடியவில்லை. ஆனால் அந்த போதகர்களுக்கும், புதிய மனிதருக்கும் இடையே தள்ளுமுள்ளு பட்டிருக்கலாமென்றும், போதகர்களை சமாளித்து தேவாலயத்துக்குள் நுழைய முடியாது என்பதை தெரிந்த பின்னரே, அந்த இடத்தில் குண்டை வெடிக்க வைத்திருக்க வேண்டும்.

அவர் குண்டை வெடிக்க வைத்த இடம், தேவாலயத்தின் பக்கவாட்டு வாயிலிற்கு வெளிப்புறம். அதற்கு அருகில், ஞாயிறு சமய வகுப்புக்கள் முடிந்த மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். குண்டுவெடிப்பில் அவர்களே அதிகம் சிக்கினர். குறிப்பிட்ட நபரில் சந்தேகம் ஏற்படாமல் இருந்திருந்தால், அவர் 9 மணிக்கு ஆராதனை தொடங்கியதும், மண்டபத்தின் நடுப்பகுக்குள் நுழைந்து குண்டை வெடிக்க வைத்திருப்பார். அது நினைத்துப் பார்க்க முடியாத சேதத்தை ஏற்படுத்தியிருக்கும்". என்று அந்தப் பணியாளர் கூறியுள்ளார். (எ)

# குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டோருக்கு கறுப்பு, வெள்ளைக் கொடி கட்டி அஞ்சலி






யாழ்ப்பாணம், ஏப். 23

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாட்டில் பல இடங்களிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

கிறிஸ்துவின் உயிர்ப்பு தினமான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையில் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தன. 290பேர் கொல்லப்பட்டனர். 450பேர் காயமடைந்தனர்.

இந்த நிலையில் துக்கம் கடைப்பிடிக்கும் வகையில் குறித்த கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்திலும் சில இடங்களில் கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாண நகரில் மாநகர சபையின் ஆளுகையில் உள்ள கடைகள் நேற்றுப் பூட்டப்பட்டிருந்தன. அவற்றுக்கு வெளியே உள்ள தனியார் கடைகள் பல திறந்திருந்தன.

**மன்னார்**

மன்னார் நகர் மற்றும் பஸார் பகுதி வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. குண்டுத் தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் மன்னாரில் பஸார் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன.



**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பகுதிகளில் வாழைமரம் நட்டுவெள்ளைக் கொடிகட்டி துக்கதி னம் கடைப்பிடிக்கப்பட்டது. களுவாஞ்சிக் குடியிலும் இவ்வாறு கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

தமிழ் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் அரச மற்றும் தனியார் வங்கிகள் இயங்கவில்லை. போக்குவரத்து நடைபெற்ற போதிலும் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஏறாவூர் உள்ளிட்ட பல பகுதிகளிலும், வர்த்தக நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை.

**அம்பாறை**

நாட்டில் அரங்கேறியுள்ள வெடிப்பு மற்றும் இடரில் ஏற்பட்ட உயிரிழப்புகளைக் கண்டித்தும் துக்கம் கடைப்பிடித்தும் கிழக்கிலங்கையில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்கள் நேற்று சோகத்தில் மூழ்கின.

தென்கிழக்கின் முக்கிய வர்த்தக நகரங்களான கல்முனை மாநகர சபைப் பிரிவு மற்றும் சாய்ந்தமருது மருதமுனை போன்ற பிரதேசங்களில் சகல வர்த்தக நிலையங்கள் வங்கிகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்டன.

முஸ்லிம், தமிழ்ப் பிரதேசங்களில் வெள்ளை கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சாய்ந்தமருது, கல்முனைப் பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களில் வெள்ளைக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன.

முக்கிய முஸ்லிம், கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

**ஹற்றனில் மெழுகுவர்த்தி அஞ்சலி**

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கு ஹற்றன் கொட்டகலை கிர்ஸ்லஸ்பாம் தோட்டமக்கள் தோட்டப்பகுதியில் உள்ள மரியம்மாள் உருவச்சிலைக்கு முன்பாக மெழுகுவரத்தி ஏந்தி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். (கு-60,30,56,60)




# கராச்சியில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப் 23


நாட்டில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலை கண்டித்தும் ,இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் பாகிஸ்தான் கராச்சி பிரதேச மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அகவணக்கம் செலுத்தினர்.

தாக்குதல் தொடர்பாக இலங்கை முஸ்லிம் சபை தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-7)




*பிரிவதற்கான நேரம் இதுவல்ல. ஒன்றுபடுவதற்கான நேரம். கொழும்பு நகரில் நேற்றையதினம் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பதாகை.*

## குண்டு வெடிப்பில் உயிரிழந்த இளைஞரின் ஜனாஸா அடக்கம்




வவுனியா, ஏப்.23
கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த இளைஞனின் ஜனாஸா நல்லடக்கம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.
கொழும்புசினமன்கிராண்ட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் வவுனியா - வேப்பங்குளம் நான்காம் ஒழுங்கையை சேர்ந்த 21 வயதுடைய முகமட் நிஸ்தார் நலீர் என்ற இளைஞன் உயிரிழந்தார்.
இளைஞனின் ஜனாஸா நல்லடக்கம்வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் ஜனாசா அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது. நல்லடக்க நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் ஐ.எம்.ஹனீபா, மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ் குமார், பிரதேச செயலர் கா.உதயராசா ஆகியோர் அங்கு சென்றதுடன் உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தி னருக்கு அரச இழப்பிடான ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினர்.
நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரிப்கான் பதியூதின், நகர சபை உபநகரபிதா சு.குமாரசாமி, பொலிஸார், இளைஞர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-110)

# யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலம்

யாழ்ப்பாணம்,ஏப். 23.
யாழ்ப்பாணத்தின் முக்கிய மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், வெளிநாட்டு அலுவலகர்கள் தங்குமிடங்கள் என்பவற்றில் என்பவற்றில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்ப டுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த நல்லைக் கந்தன் ஆலயம் , இந்தியத் துணைத் தூதரகம் உள்ளிட்ட அனைத்து இடங்களிற்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் பல இடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களை அடுத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கு நேற்று முன்தினமே பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
பொலிஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் உடனடியாக வழங்கப்பட்ட நிலையில்; நேற்று சிறப்பு அதிரடிப்படையினரும் இறக்கப்பட்டிருந்தனர்.
இதேபோன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பிற மாவட்டங்களுக்கு பயணத்தை மேற்கொண்ட சகல பேரூந்துகளில் பயணிக்கும் பயணிகள் கொண்டு செல்லும் பொதிகள் அனைத்தும் பரிசோதனையின் பின்பே அனுமதிக்கப்பட்டன. (க-105)



## வழிபாட்டு தலங்களுக்கு பாதுகாப்பு நீடிக்கின்றது

வவுனியா, ஏப். 23
வழிபாட்டுத் தலங்களில் பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு நீடிக்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு உட்பட நாட்டிலுள்ள சகல வழிபாட்டுத் தலங்களிலும் நேற்றுமுன்தினம் தொடக்கம் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது நீடிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.
கொழும்பிலும் மட்டகளப்பிலும் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டும், காயப்பட்டும் உள்ள நிலையில் முன்கூட்டியே அசம்பாவிதங்களை தவிர்க்கும் பொருட்டு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த-110)

## பன்னாட்டு ரீதியில் பேசுபொருளான குண்டு வெடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23
இலங்கையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் பன்னாட்டு ஊடகங்கள் மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் நேற்றும் பேசுபொருளாக இருந்தன.
குறிப்பாக லண்டன், நியூசிலாந்து, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இந்த விவகாரம் நேற்று உச்சக்கட்டப் பேசுபொருளாக இருந்தது. (ம-7)

## யாழ். ஆயர் - ஆளுநர் நேற்று சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் அருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முற்பகல் ஆயர் இல்லத்தில் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பின்போது நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் ஆழ்ந்த கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்த ஆளுநர், வடமாகாணத்தின் தற்போதைய நிலமைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (ம-7)



## பயணிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப். 23
தற்போதைய சூழ்நிலையில், பயணிகளை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
தொடருந்து மற்றும் பேருந்துகளில் பயணிப்பவர்கள் தங்களுக்குச் சொந்தமில்லாத சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருப்பதைக் கண்டால் உரிய விதத்தில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்குங்கள். பேருந்துகளில் பயணிப்பவர்கள் தங்களது பொருள்களைத் தங்களுடனே வைத்திருக்குமாறும் பேருந்தில் எந்தவொரு இடத்திலும் வைக்க வேண்டாம் என்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
இதேவேளை, பாரமான, பெரியளவான பொதிகளை தொடருந்துகளில், பேருந்துகளில் கொண்டு செல்வதைத் தவிர்க்குமாறும் பாதுகாப்பு நிமித்தம் கூறப்பட்டுள்ளது. (த)



## திடீர் ஊரடங்கால் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம்,ஏப் 23
நாட்டில் நேற்று முன்தினம் திடீர் என்று நடைமுறை படுத்தப்பட்ட பொலிஸ் ஊடரங்கு சட்டத்தால் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்துக்கு வந்திருந்த பயணிகள் 6 மணித்தியாலங்களுக்கு மேலாக தமது பொழுதை சிரமத்தின் மத்தியில் கழித்ததாக தெரிவிக்கின்றனர்.
நாட்டில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பல்வேறு குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து பிற்பகல் 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரையான 12 மணி நேர பொலிஸ் ஊடரங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் அதி தீவிரமான சோதனை நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. இதனால் பயணிகளின் பொதிகள் பரிசோதனைக்காக சுமார் 2 மணி நேரங்கள் வரை செலவுசெய்யபப்பட்டது. அத்துடன் வானூர்தி நிலையத்தை வந்தடைந்தவர்கள் சுமார் 6 மணித்தியாலங்கள் வரை நிலையத்தில் தங்கி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக பயணிகள் தெரிவித்தனர். (க-7)

## எரிபொருள் நிலையங்களுக்கு படையெடுத்த பொது மக்கள்



கொடிகாமம் ஏப். 23
நாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற பதற்றத்தில் மக்கள் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கின்றனர்.
நேற்றுக் காலை தொடக்கம் கொழும்பை அடுத்துள்ள பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களால் நாடே அதிர்வுக்கு உள்ளாகியிருந்தது. அத்துடன் மாலை 6 மணி தொடக்கம் பொலிஸ் ஊரடங்கு அறிவித்துள்ளதையடுத்து நாட்டில் மேலும் பதற்றம் காணப்பட்டது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் பெருமளவு வணிக நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் சந்தை வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து அனைத்து வியாபாரிகளும் கடைகளை மூடிவிட்டு வீடுகளுக்குச் சென்றனர். வாகனங்கள் போக்குவரத்தும் குறைந்து காணப்பட்டது. இதேவேளை எரிபொருள் நிலையங்களில் பெருமளவு வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதில் ஆர்வங் காட்டியதைக் காண முடிந்தது. (க-159 ,9)

## நாடு திரும்பினார் மைத்திரி

கொழும்பு, ஏப். 23
தனிப்பட்ட பயணமாக இந்தியா மற்றும் சிங்கப்பூருக்குச் சென்றிருந்த அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினமிரவு நாடு திரும்பியுள்ளார்.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 அளவில் சிங்கப்பூர் வானூர்தி சேவைக்குச் சொந்தமான எஸ்.கியூ468 ரக வானூர்தியில் அவர் நாடு திரும்பினார் என்று வானூர்தி நிலையத் தகவல்கள் தெரிவித்தன. கொழும்பு, மட்டக்களப்புப் பகுதிகளில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 290 பேர் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்தவாரம் இந்தியா சென்றிருந்த அரசதலைவர் அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்று நேற்று நாடு திரும்பினார். (த)

# தாக்குதல்கள் தொடர்பாக கடும் நடவடிக்கை தேவை

## அகில இலங்கை இந்துமாமன்றம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 23

குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றம், இது தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடந்தேறியுள்ள மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறான செயல்களை வன்மையாக கண்டிப்பதாக அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்தது.

இந்தச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவர்களை இழந்து வாடிநிற்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம். காயமுற்றவர்கள் விரைவில் குணமடைந்து தமது இயல்பான நிலைக்கு மீள பரம்பொருளைப் பணிந்து பிரார்த்திக்கிறோம்.

மனிதர்கள் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் சமாதானத்துடனும், சகோதரத்துவத்துடனும் பிற உயிர்கள் மீது அன்புடனும் வாழவேண்டும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அந்தக் கடமை உண்டு என்பதை என்றும் எமது நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றுள்ளது. (த)

## மிலேச்சத்தனமான மோசமான தாக்குதல்

### தபால்துறை அமைச்சர் கண்டனம்

கொழும்பு, ஏப். 23

அப்பாவி மக்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியது மிலேசத்தமானதும் ஈன இரக்கமற்ற செயற்பாடு. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயம். இந்த மோசமான சம்பவத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழிபாட்டுத் தலங்கள் புனிதமான இடங்கள். பிரார்த்தனைக்காகவும் மனஅமைதிக்காகவும் ஒன்று கூடுமிடம். கத்தோலிக்கர் ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடி ஆராதனையில் இருந்த வேளையில் இந்த மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதல் நடத்தியமை மன்னிக்க முடியாத குற்றம். இலங்கையில் சில ஆண்டுகளாக சாந்தி, சமாதானம் நிலவி வருவதோடு எல்லா இனத்தவர்களும் மதத்தவர்களும் சந்தோசமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு சம்பவம் இடம்பெற்றிருப்பது துர்ப்பாக்கியமானது - என்றார். (த)

## பயங்கரவாத நிகழ்ச்சிநிரலுக்கு அமைச்சர் மஹ்ரூப் கண்டனம்

மூதூர், ஏப். 23



நாட்டை சீரழித்த போரும், போதைப் பொருளும் முடிவுக்குக் கொண்டு வந்த நிலையில் சமூகங்களுக்கு இடையில் கசப்புணர்வை ஏற்படுத்திய இவ்வாறான பயங்கரவாத நிகழ்ச்சி நிரலை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைப் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்பை முறியடித்து செயற்படும் இவ்வாறான குண்டு வெடிப்பு பயங்கரவாதச் சம்பவங்கள் ஏற்படுத்தப்பட்டு நாட்டை குட்டிச் சுவராக்குவதற்கு விட முடியாது. இதனால் மன வேதனை அடைகிறேன். புயங்கரவாத சம்பவங்கள் நடப்பதை எந்தச் சமுதாயமும் வரவேற்காது.

முஸ்லிம் சமூகம் இஸ்லாத்தின் சிந்தனையில் சிந்திக்கிறது. சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் பிடியின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும். நாட்டின் அந்நியச் செலாவணி, பொருளாதாரம் என்பன சீரழிந்து அழிவுப்பாதைக்குச் செல்வதை ஒரு போதும் ஏற்க முடியாது. நாட்டினுடைய ஒற்றுமைக்காக அனைவரும் உழைக்க வேண்டும். (த)

## வெடிப்புகளை மனித உரிமை அமைப்பு கண்டிக்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 23

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைக் கண்டிப்பதாக மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது பற்றி அமைப்பு அனுப்பிய செய்திக் குறிப்பில், கிறிஸ்தவர்களின் முக்கிய நாளில் நடத்திய தாக்குதல் மிருகத்தனமான மனித நேயமற்ற செயலாகவுள்ளது. இலங்கை அரசு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (த)

## தொழிலாளர் காங்கிரஸ் வன்மையான கண்டனம்

பொகவந்தலாவ, ஏப். 23

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிகழ்த்தப்பட்டுள்ள குண்டு வெடிப்புக்களால் நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளமைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

போரால் சின்னாபின்னமாக்கப்பட்ட எமது நாடு சற்று ஆறுதலடைந்து சமாதானம் துளிர்விட ஆரம்பித்துள்ள நிலையில் மற்றுமொரு போராக இந்தப் பயங்கரம் நிகழ்ந்துள்ளது.

மதங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் மோதலை ஏற்படுத்தி நாட்டைச் சீரழிப்பதே இந்தப் பயங்கரத்தின் பின்னணியாக இருக்கலாமென்று நாம் கருதுகிறோம். சதிகாரர்களின் எண்ணத்துக்கு அடைக்கலம் கொடாமல் நாட்டின் நலன்கருதி சகலரும் செயற்பட வேண்டியது தற்போதய நிலையில் அவசியம் என்று மேலும் தெரிவித்தது. (த)

## குண்டுவெடிப்புக்கு லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 23

நாட்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது பற்றி கட்சி அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தத் தாக்குதல்களில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வழிபாட்டிடங்களில் வன்முறைகளைத் தூண்டும் மத அடிப்படைவாத, வலதுசாரிப் பிற்போக்கு சக்திகளை இனங்கண்டு எதிர்த்து நிராகரிக்கின்ற அதேவேளை, மதச்சார்பற்ற மனித மாண்பைப் பாதுகாக்கப் பாடுபடவும் வேண்டும் என்று எமது கட்சி வலியுறுத்துகின்றது என்றுள்ளது. (த)

## அமெரிக்க வர்த்தக சம்மேளனம் வெடிப்புக்களைக் கண்டிக்கிறது

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களை, அமெரிக்க வர்த்தக சம்மேளனம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இந்த துயரமான நேரத்தில் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம். நாம் மக்களுடன் ஒற்றுமையாக நிற்கிறோம்.

சட்டம் ஒழுங்கை விரைவாக நடைமுறைப்படுத்தவும், ஜனநாயகம் மற்றும் தேசத்தின் நிலையான தன்மையை உறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எமது தலைவர்களிடமும் அரசிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நாம் கேட்டுக் கொள்கிறோம் என்று சம்மேளனம் மேலும் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (த)

## உறவுகளுக்கு இறைவன் அமைதியை வழங்கட்டும்

மூதூர், ஏப். 23

கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழா கொண்டாடும் வேளையில் நடைபெற்ற துயரச் சம்பவங்கள் மிகவும் வேதனைக்குரிவை. இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மசாந்தியையும், இழந்த உறவுகளுக்கு மன அமைதியையும் இறைவன் வழங்க வேண்டுகின்றேன்.

இவ்வாறு சேனையூர் நாகம்மாள் ஆலயத்தின் தலைமைக்குரு சிவசிறி அ.அரசரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பியல் கருத்துத் தெரிவித்த அவர், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுள்ள சம்பவங்களால் பல உயிரிழப்புக்கள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒவ்வொரு மதங்களும் அன்பையே போதிக்கின்றன.

இந்த நிலையில் தேவாலயங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பல்லின மத, கலாசாரத்துடன் வாழ்கின்ற நாட்டில் சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஒற்றுமை, மனிதநேயம் தேவையாக இருக்கின்றது.

இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களது ஆன்மா இறைவன் இடத்தில் இளைப்பாறட்டும் -என்றார். (த-40)

## குண்டுவெடிப்புக்களுக்கு உலமா சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 23

அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டக் கிளை தெரிவிக்கிறது.

இது பற்றி அந்த அமைப்பு அனுப்பிய செய்திக் குறிப்பில்,

கிறிஸ்தவ மக்களின் முக்கிய தினத்தில் அவர்களின் மதத் தலங்களை இலக்கு வைத்துத் தாக்கப்பட்டிருப்பதானது எந்த விதத்திலும் ஏற்க முடியாத ஒன்று. உண்மையாகவே சமய நம்பிக்கையுள்ள எவனும் இவ்வாறு செய்திருக்கமாட்டார்கள்.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இந்தப் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு தகுதி தராதரம் பார்க்காமல் கடுமையான தண்டனையை நீதித்துறை வழங்க வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் புரிந்துணர்வும் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (த)

## குண்டுவெடிப்பைக் கண்டிக்கிறோம்

யாழ்ப்பாணம் . ஏப்.23

பரிசுத்தமான நன்னாளில் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளைக் கண்டிக்கிறோம். இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்கள் ஐக்கியம்.

நேற்று முன்தினம் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்கள் ஐக்கியம் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயேசுக்கிறிஸ்துவின் உயிர்தெழுந்த நாளில் தேவாலயங்களில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தருணம் தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் மற்றும் பல இடங்களிலும் நடைபெற்ற திட்டமிட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எமக்கு மிகுந்த வேதனையையும் கவலையையும் அளிக்கின்றன. இந்தச் சம்பவங்களில் உறவுகளை இழந்தவர்களும் காயப்பட்டவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான துயரத்துடன் நாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு ஆறுதல் பெறவும் சமாதானம் அடையவும் எம் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் இவ்விதமான மனித நேயமற்ற கொடூரமான தாக்குதல்களை மிகவும் வன்மையாக் கண்டிக்கிறோம்- என்றுள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களை கொண்டு அரசியல் இலாபம் தேட வேண்டாம்

## அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்து

கொழும்பு, ஏப். 23

மதமுக்கியத்துவம் வாய்ந்த புனித தினமான உயிர்த்த ஞாயிறன்று திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கலாம் என்று நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.


அதற்கு ஊடகங்கள் துணைபோகக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

அந்நியர்களிடம் போராடிப் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் கைகோர்க்குமாறு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர் குண்டுத் தாக்குதல்களில் 290 பேர் கொல்லப்பட்டும் 450க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் உள்ளனர். கொல்லப்பட்டவர்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த 32பேர் வரையிலும் உள்ளடங்குகின்றனர். இந்தச் சம்பவங்களுக்குப் பல தரப்பினரும் கண்டனங்கள் தெரிவித்துவருகின்றனர். (த)





## ஓலைத்தொடுவாய்ப் பகுதியில் கிளைமோர் கைப்பற்றப்பட்டது

மன்னார், ஏப். 23

மன்னார் தலைமன்னார் வீதி ஓலைத்தொடுவாய் வளன் நகர் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் பன்ணை வளாகத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கிளைமோர் குண்டொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

குறித்த பண்ணையின் உரிமையாளர் குறித்த பண்ணையைத் துப்பரவு செய்து கொண்டிருந்த போது முருங்கை மரத்தின் கீழ் வெடிபொருள் புதைத்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு அந்தக் குண்டு மீட்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-56)

## போதைப்பொருள் வர்த்தகம் தாக்குதலுக்குக் காரணமா?

### சிவமோகன் எம்.பி. சந்தேகம்



வவுனியா, ஏப். 23

போதைப் பொருள் வர்த்தகமே தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்து படுகொலைத் தாக்குதல் நடந்தேறியுள்ளது. 250க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறந்துள்ளார்கள். பலர் படுகாயமடைந்துள்ளார்கள். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்பது வேதனைக்குரியது. தேவாலயங்கள் மற்றும் நட்டசத்திர கொட்டல்கள் மீதான தாக்குதலானது நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பன்னாட்டுப் ப்யங்கரவாத அமைப்பு ஒன்று நன்கு திட்டமிட்டு உள்நாட்டில் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களைப் பொறுத்தவரையில் இலங்கை போதைப்பொருள் விற்பனை மையமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தென்னாசிய பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இலங்கை இருக்கின்றது. இதன் காரணமாக இலங்கையை மையமாகக் கொண்டு போதைப்பொருள் வியாபாரம் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கும் நேரத்தில் இலங்கை அரசு இதை ஒட்டு மொத்தமாக இலங்கையில் வேரறுக்க முயன்றிருக்கின்றது. இதன் பின்னணியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க முடியும் என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

கிறிஸ்தவ மக்கள் அநாவசியமாக குறி வைக்கப்பட்டுள்ளார்கள். வேறு ஏதோ ஒரு விடயத்துக்காக மதச் சாயம் பூசப்பட்டு குறி வைக்கப்படுகிறார்கள். ஆனால் இந்தத் தாக்குதலுக்கும் மதத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது தான் உண்மையாக இருக்கின்றது. இது உள்நாட்டில் அதிகாரத்தை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட தாக்குதலா? இல்லையா? என்பதை அரசு தெளிவாக வெளிக்கொண்டு வர வேண்டும்.

எப்பொழுதுமே சிங்கள தேசமானது அங்கு நடைபெறும் கொடுமைகளை மறைத்துவிடும் தன்மை காணப்படுகின்றது. ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும், சரணடைந்த போது நடைபெற்ற கொலைகள், பாதிரியார் ஒருவரின் துணையுடன் சராணாகதி அடைந்தவர்களின் கொலைகள் இவை அனைத்தும் மூடி மறைக்கப்பட்டுள்ளன. இவைகளுக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிப்பதற்கோ, வெளிக்கொண்டு வருவதற்கோ, தண்டிப்பதற்கோ இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதேபோல் இந்த விடயத்திலும் அவர்கள் அப்படியான மூடி மறைப்புக்களைச் செய்யக் கூடாது. எதுவாக இருந்தாலும் சட்டத்தின் முன் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பன்னாட்டுப் பயங்கரவாதம் என்ற கோணத்தில் இதை பார்க்கக் கூடியதாக இருக்கும் என்றார். (த-110)

## ஆலயத்துக்கு அருகில் சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 23

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குற்றச்சாட்டின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதை தொடர்ந்து வணக்கத் தலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எருவில் கிராமத்தில் கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிசேக நிகழ்வு இடம்பெற்றது. அதிகளவான மக்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். மாலை 4.30க்கு பின்னர் ஆலயத்தை அண்டிய சூழலில் சந்தேகத்தின் பேரில் நடமாடிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிராம மக்களுக்கும் அறியப்படாத நபராக இருந்த நிலையில், பிரதேசவாசிகள் அவரிடம் விசாரித்துள்ளனர். அவர் முன்னுக்குபின் முரணாக பேசியதையடுத்து, ஆலய நிர்வாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியது. சம்பவ இடத்துக்கு வந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபரை அழைத்துச் சென்றுள்ளனர். (ஓ.5)

## 275 கிலோ போதைப்பொருள் கடற்படையால் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

ஹெரோய்ன் என்று சந்தேகிக்கப்படும் 275 கிலோகிராம் போதைப்பொருள் நேற்று மீட்கப்பட்டது என்று இலங்கை கடற்படை நேற்று அறிவித்தது.

கடற்படையினர் கப்பலொன்றில் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பின் போதே இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்றும், அதைக் கொண்டுவந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இலங்கை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் வழங்கப்பட்ட தகவலின் படி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போது இலங்கைக்கு வடகிழக்கு கடற்பகுதியில் வைத்து இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-21)

## கலந்துரையாடல் இன்று நடைபெறாது

தென்மராட்சி,ஏப்.23

தென்மராட்சி கல்வி வலயத்தில் இன்று நடைபெறவிருந்த வலய அலுவலர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களில் நேற்றும், தென்மராட்சி மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களில் இன்றும் நடைபெறவிருந்த கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களே நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## புலனாய்வு எச்சரிக்கை தொடர்பாக ரணிலுக்கு அறிவிக்கப்படவில்லை!

### நேற்று முன்தினம் அவரே தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

நாட்டை உலுக்கிய தற்கொலைக் குண்டுதாக்குதல்கள் பற்றிய புலனாய்வு எச்சரிக்கை தனக்கோ, அமைச்சரவைக்கோ தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அலரிமாளிகையில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தாக்குதலுடன் தொடர்புடைய எவருக்கும் ஒரு துளி இரக்கமும் காட்டப்படாது என்றும், பயங்கரவாதத் தடைச்சட்டங்களின் ஊடாக உயர்ந்தபட்சதண்டனை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர் குண்டுவெடிப்புக்கள் பற்றி பாதுகாப்புச் சபையைக் கூட்டி நடவடிக்கையை எடுத்தோம். நாடாளுமன்றை இன்று கூட்டவுள்ளோம். அமைச்சர்களுடன் பேசி அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் பேசி நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தோம்.

கல்வி அமைச்சருடன் பேசி பாடசாலைகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை அளிக்க நடவடிக்கை எடுத்தோம். குண்டு வெடிப்புக்குள்ளான கட்டான, கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்துக்கும் சென்று நேரில் ஆராய்ந்தோம். தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து கொள்கிறோம்.

இந்தியா, பாகிஸ்தான், நேபாள நாடுகளின் தலைமைஅமைச்சர்களும் அயலுறவு அமைச்சர்களும் தொடர்புகொண்டு எமக்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும் பல தலைவர்கள் பேசினார்கள்.

**பன்னாட்டுப் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படும்**

இந்தத் தாக்குதல் திட்டத்துடன் பன்னாட்டுச் சக்திகள் தொடர்புபட்டுள்ளனவா என்பதை ஆராய பன்னாட்டுப் பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியம். எமது புலனாய்வுப் பிரிவும் அது குறித்து ஆராயும்.

இதில் பாரதூரமான விடயம் என்னவெனில், தாக்குதல் குறித்து ஆரம்பத்திலேயே எச்சரித்தும், துரதிஸ்டவசமாக எனக்கோ, அமைச்சரவைக்கோ இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. இந்த அசமந்தமே தாக்குதல் தொடர்பான நடவடிக்கையை எடுக்க முடியாமைக்கு காரணம்.

**பொறுமை காக்கவேண்டும்**

எனினும், நாடு நெருக்கடியாக உள்ள இந்த நிலைமையில் இந்த விடயங்களைப் பேசிக் கொண்டிருக்காமல், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்கிறோம். இந்தச் சம்பவத்தையொட்டி இனவாதம், மதவாதம் கக்கப்பட்டால் மீண்டும் வன்முறையே உருவாகும். அதனால் அனைவரும் பொறுமை காக்க வேண்டும் - என்றார். (த)

# திட்டமிட்ட அரசியல் சதியா?

## சீமான் கேள்வி

இரண்டு இலட்சம் தமிழர்கள் சிங்களப் பேரினவாதத்தின் அரசப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளாகி அதற்கு நீதிகேட்டு இன்றும் நாம் போராடிக் கொண்டிருக்கிற வேளையில், தொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் தாக்குதலானது பெரும் ஐயத்தைத் தோற்றுவிக்கிறது என்று தெரிவித்தார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

இலங்கைத் தாக்குதல் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் கொழும்பில் உள்ள தேவாலயங்களிலும், தங்கும் விடுதிகளிலும் நடைபெற்ற குண்டு வெடிப்பில் பொதுமக்கள் உயிரிழந்திருப்பது தாங்கொணாத் துயரத்தைத் தருகிறது. உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும், 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் எனவும் வெளியாகியிருக்கிற செய்திகள் பெரும் கவலையைத் தருகின்றன. ஈஸ்டர் திருநாளையொட்டி தேவாலயங்களுக்கு வழிபடச் சென்ற மக்கள் மீது திட்டமிட்டு இக்கோரத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அண்மைக் காலமாக மசூதிகள் மீதும், தேவாலயங்கள் மீதும் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கிற நிலையில் ஈஸ்டர் நாளன்று தேவாலயங்களைக் குறிவைத்து தொடுக்கப்பட்டிருக்கிற இத்தாக்குதல் பெரும் சந்தேகத்தைக் கிளப்புகிறது. இந்திய உளவு அமைப்பு இதுகுறித்தான எச்சரிக்கைச் செய்தியினை இலங்கை அரசுக்கு 4 நாள்களுக்கு முன்பே கொடுத்துவிட்ட பிறகும் இலங்கை அரசு மெத்தனமாக இருந்ததன் மர்மம் என்ன? என்பது புரியாத புதிராக இருக்கிறது. மேலும், இலங்கையில் தேர்தல் நெருங்குகிற வேளையில், அதுவும் தமிழர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் நடத்தப்பட்டிருக்கிற இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் சிங்களப் பௌத்தப் பயங்கரவாத இலங்கை அரசு மீதே ஐயத்தைத் தோற்றுவிக்கிறது. தமிழர்கள் மீதான இனரீதியிலான சிங்களப் பேரினவாதத் தாக்குதலிலிருந்து தற்காத்துக்கொள்ள இறுதிவரை போர்விதிகளைக் கடைப்பிடித்துச் சிங்கள மக்களுக்குச் சிறு இடையூறுகூட அளித்திடாத வகையில் போரிட்டு அறநெறியின் வடிவமாகக் களத்தில் நின்ற விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்துச் சிங்கள மக்களிடையே அரசியல் செய்திட்ட சிங்களப் பேரினவாத அரசு இப்பயங்கரவாதத் தாக்குதலுக்கு என்ன காரணம் கற்பிக்கப் போகிறது? 'தீவிரவாதத்துக்கு எதிரானப் போர்' என்ற பெயரில் தமிழர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலையை ஆதரித்த உலக நாடுகள் இப்போதையத் தாக்குதலுக்கு என்ன பதிலைத் தரப்போகிறன? போர்க்கருவிகள் உள்ளிட்ட எல்லா உதவிகளையும் தந்து பௌத்த சிங்கள அரசு தமிழர்களை கொன்றழித்தபோது துணை நின்ற இந்திய அரசு, இந்த மதரீதியிலான தாக்குதலுக்கு என்ன செய்யப்போகிறது? 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிங்கள அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைக்குப் பிறகு மிகவும் பாதிப்பிலிருந்த ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை இத்தாக்குதல் மேலும் கேள்விக்குறியாகியிருக்கிறது. இத்தாக்குதலை நடத்தி மக்களின் உயிரைப் பறித்த இச்சதிச் செயலுக்குப் பின்புலத்தில் இருப்பவர்கள் எவராயினும் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதுதான் மானுடத்தை விரும்புகிற ஒவ்வொருவரின் கருத்தாகவும் இருக்கிறது. அதற்கு எவ்வித அரசியல் தலையீடு மற்ற ஒரு நேர்மையான பார்வையோடு கூடிய விசாரணை அவசியப்படுகிறது. இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையே இன்னும் தொடங்கப்படாத நிலையில் இப்பயங்கரவாதத் தாக்குதலுக்கு, இசுலாமியர்கள் மீது பழிபோடுகிற கருத்துருவாக்கங்களை வடஇந்திய ஊடகங்கள் செய்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியது. இது உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கச் செய்யும் மடைச் செயலாகும். ஆகவே, இவ்விவகாரத்தில் சரியான விசாரணையையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடுகளையும், தகுந்த மருத்துவச் சிகிச்சையும் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது.

(ம)

# மனிதப் பண்புகளைக் கடந்த தாக்குதலைக் கண்டிக்கிறோம்

## தமிழ் அரசின் இளைஞரணிச் செயலர் அறிக்கை

கொழும்பு, ஏப். 23



மனிதப்பண்புகளைக் கடந்து மிருகத் தனமாக நடத்தப்பட்ட தாக்குதலை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணிச்செயலர் சுரேன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, மட்டக்களப்பு பகுதிகளில் நேற்று நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனித நாகரிகங்களை கடந்து மனிதாபிமானமற்ற மிருகத்தனமான மனதைக் கொண்டவர்கள் நடத்திய இந்தத் தாக்குதல் கோழைத்தனமானது. பாவங்களேதுமறியாத அப்பாவி மக்கள்தமது மதப்பெருநாளைக் கடைப்பிடிப்பதற்கு மகிழ்வாகச்சென்ற தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் தமிழ் மக்களுக்குக் கடந்த கால நினைவுகளை மீட்கின்ற சம்பவமாகக் காணப்படுகின்றது.

நாட்டின் ஒவ்வொருவரும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். தாக்குதல்களில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (த-105)

# காட்டுமிராண்டித்தன தாக்குதல்கள் இவை!

## சிறீதரன் எம்.பி கடும் கண்டனம்

மனித குலத்துக்கும் எதிரான காட்டுமிராண்டித் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது கண்டனம் வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:

இன்று (நேற்று) அதிகாலையிலிருந்து இலங்கையின் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் இடம்பெறும் அப்பாவி உயிர்களையும் வழிபாட்டுத் தலங்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கொடூரமான குண்டுத் தாக்குதல்கள், காட்டுமிராண்டித்தனமான சிந்தனையுள்ள மனித குலத்தை, மனித உயிர்களை மதிக்கத் தெரியாத வன்முறையாளர்களின் தாக்குதல் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இயேசு பிரான் மரித்து உயிர்த்தெழும் இன்றைய (நேற்றைய) நாளில் பச்சிளம் பாலகர்களும் அப்பாவி மக்களும் இறைவனை நோக்கி இரந்து இறையாசி வேண்டி நின்ற வேளையில் மனிதாபிமானமற்ற கொடூர வன்மமான எண்ணமுள்ள வெறித்தனக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களைக் கண்டிப்பதோடு இனியும் மக்கள் அவதானமாகவும் பக்குவத்தோடும் பொறுப்புணர்வோடும் நடக்க வேண்டிய தருணமாக இதை நினைத்துச் செயற்பட வேண்டும் என்றுள்ளது. (ம-426)

# சதி முயற்சிகளுக்கு இடமளியாதீர்கள்

## சந்திரகுமார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

நாட்டை அமைதியின்மைக்குள் தள்ளிவிடும் சதி முயற்சிகளுக்கு அனுமதிக்கக் கூடாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'போர் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த போது இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நாட்டை மீண்டும் வன்முறைக்குள் தள்ளி அமைதியின்மையை ஏற்படுத்திவிடும் சதி முயற்சி களுக்கு அனுமதிக்க கூடாது. இலங்கை மக்கள் என்ற வகையில் நாம் அனைவரும் இனம் மதம், மொழி கடந்து இலங்கை குடிமக்க ளாகப் பொறுப்புடன்நடந்துகொள்ள வேண்டிய சூழல் இதுவாகும்' என்று தெரிவித்துள்ளார். (ஒ.5)

# குண்டு வெடிப்புக்கு மைத்திரியே பொறுப்பு

## மேர்வின் காட்டம்

கொழும்பு, ஏப். 23

நாடு முழுவதில் இடம்பெற்ற இந்தப் பெரிய குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார். பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் அவர் முப்படையினருக்கு வழங்காதமை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். பாதுகாப்பு அமைச்சருக்கான பொறுப்பை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ.5)

# குண்டு வெடிப்புக்கள் கண்டனத்துக்குரியவை

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு

இலங்கை மக்களை பெருந்துயரத்தில் தள்ளியுள்ள தொடர் குண்டு வெடிப்புகளானவை மனித குலத்துக்கு எதிரானதும் கண்டிக்கத்தக்கதுமான பயங்கரவாத தாக்குதல்களாகும். இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் காயமடைந்துள்ள மக்கள் விரைவில் குணமடைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு சிறப்பு ஏற்பாடுகளின் அடிப்படையில் செய்வதுடன் காயமடைந்த மக்களுக்கு தேவையான குருதிக் கொடை வழங்குவதற்கு நாடு தழுவிய ரீதியில் மக்கள் முன்வந்து இன பாரபட்சங்களுக்கு இடமளிக்காமல் வழங்கியிருப்பது போற்றத்தக்க மனித நேய உதவியாகும்.

தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள் எவ்விதமான பாரபட்சத்துக்கு இடமளிக்காத வகையில் முன்னெடுக்கப்பட்டு நாட்டில் அமைதி நிலைநாட்டப்படுவதுடன் மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சமும் பதற்றமும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

பொதுமக்கள் தமது பாதுகாப்பையும் நாட்டின் அசாதாரண சூழலையும் கவனத்தில் கொண்டு நிதானமாகவும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என்றும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம)

# இலங்கை தாக்குதல் ஸ்டாலின் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கையில் தேவாலயங்களில் தாக்குதல் நடத்தப்பட்டதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்தார். இதயத்தை நொறுக்கும் கொடூர தாக்குதலின் பின்னணியில் எந்தச் சக்தி இருந்தாலும் அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ம)

# முள்ளிவாய்க்கால் அவலத்தை குண்டுவெடிப்பு நினைவுபடுத்துகிறது

## சிறிரெலோ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கையில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்பு சம்பவங்களானது மீண்டும் எம் கண்முன் முள்ளி வாய்க்கால் அவலத்தை மீட்டுக் காட்டுகிறது என்று சிறிரெலோ கட்சியின் செயலர் ப.உதயராசா தமது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் எந்த விதமான தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றதில்லை. இன மத மொழி வேறுபாடின்றி இலங்கையில் அனைத்துச் சமூகமும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நாட்டு மக்களின் மத்தியில் என்றுமே மாறாத வடுவாக வரலாற்றில் பதிவாகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இந்தப் பயங்கரவாத தாக்குதலை வைத்து நாட்டுக்குள் இருக்கும் இன மத ஒற்றுமையை சீர்குலைக்க நாசகார கும்பல்கள் முயற்சிக்கும். பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு அந்தத் தீய சக்திகளின் செயற்பாட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# பெரிய தாக்குதல் நடக்கும் என தகவல் ஏதும் கிடைக்கவில்லை

## பாதுகாப்புச் செயலர் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.23
சில இடங்களில் தாக்குதல் நடக்கும் என்றே தகவல்கள் கிடைத்தி
ருந்தன. ஆனால் இவ்வாறு பெரும் தாக்குதல்கள் நடக்கும் என்ற
தகவல் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செய
லாளர் ஹேமசிறி பெர்ணான்டோ.

கொச்சிக்கடை தேவாலயத்துக்கு
நேற்று நேரில் சென்ற அவரிடம் பன்
னாட்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்
பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே
அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமக்கு சில தகவல்கள் கிடைத்தன.
அங்காங்கே சில தாக்குதல் சம்பவங்
கள் இடம்பெறலாம் என்று தான் அவை
அமைந்திருந்தன. ஆனால் அந்தத்
தகவல்கள் தொடர்ச்சியான முறையில்
அமைந்திருக்கவில்லை.
அதேநேரம் சில சம்பவங்கள் நிகழப்
போவது என்று அறிந்திருந்தாலும்
நாட்டில் போர் நிறைவுக்கு கொண்டுவ
ரப்பட்டுஜனநாயகம்நிறுவப்பட்டுள்ளது.
அவசரகாலச் சட்டம் நடைமுறையில்
இல்லை என்றார்.
கேள்வி: உங்களுடைய புலனாய்வு
கட்டமைப்பு எவ்வாறான எச்சரிக்
கையை விடுத்திருந்தது?
பதில்: ஒரு சிறுகுழுவொன்று தாக்குதல்
களை செய்வதற்காக முயற்சிகளை
எடுத்துள்ளது. ஆனாலும் அந்தக் குழு
பலமானது. நாம் அதனை கட்டுப்படுத்த
நடவடிக்கைகளை எடுத்தோம். தற்போ
தும் கூட குண்டுச் செயலிழப்பு செயற்
பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.
வெளிநாட்டு இராணுவத்தின் உதவி
அதவாது எப்.பி.ஐ போன்றவற்றின்
ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது. இன்
ரப்போல் நாளை வருகின்றது.
கேள்வி: நீங்கள் தகவலைப்பெற்றிருந்
தால் உடனடியாக எச்சரிக்கை செய்தி
ருக்கலாம் அல்லவா?.
பதில்: போர் நடைபெற்ற காலத்தில் கூட
நாங்கள் ஹோட்டல்களுக்கு பாதுகாப்பு
அளித்திருக்கவில்லை. அவர்கள் தனி
யான பாதுகாப்பை வைத்துள்ளார்கள்.
அந்தப் பாதுகாப்பு உயர் மட்டத்தில்
உள்ளது. நாங்களும் எமக்கு கிடைத்த
தகவல்களை வைத்து அறிவுறுத்தல்
களை வழங்கியிருந்தோம். நாங்கள்
எதிர்காலத்திலும் ஹொட்டல்களுக்கு
பாதுகாப்பு வழங்கப்போவதில்லை.
கேள்வி: ஹோட்டல் விடயங்களை
விடுங்கள், தேவாலயங்களுக்கு பாது
காப்பு வழங்கியிருக்கலாமல்லவா?
பதில்: உங்களுக்கே தெரியும். இலங்
கையில் ஆயிரக்கணக்கான தேவால
யங்கள் இருக்கின்றன. எதற்கென்று
பாதுகாப்பைவழங்குவது. இருப்பினும்
நாம் அறிவுறுத்தல்களை வழங்கி
னோம். புனித நாளில் பதற்றத்தை
ஏற்படுத்தமுடியாது. இவ்வளவு பாரதூ
ரமாக நிகழும் என்று நாம் எண்ண
வில்லை. (எ)

# தீவிரவாதிகள் வெறியாட்டம்: தமிழ் மக்களே மிக அவதானம்

## சம்பந்தன் வேண்டுகோள்

கொழும்பு, ஏப்.23
இலங்கையில் தீவிரவாதி
களின் வெறியாட்டம் தொட
ரக்கூடும். எனவே, வடக்கு,
கிழக்குவாழ் தமிழ் மக்கள்
மிகவும் அவதானமாக
இருக்கவேண்டும். எமது
மக்கள் தத்தமது பாது
காப்பை உறுதிப்படுத்திக்
கொள்ள வேண்டும்.
இவ்வாறு வேண்டுகோள்
விடுத்துள்ளார் .தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பின்
தலைவர் இரா.சம்பந்தன்.
அவர் தெரிவித்தாவது
மட்டக்களப்பு உட்பட 8
இடங்களில் நேற்றுமுன்தி
னம் இடம்பெற்ற கோழைத்
தனமான தாக்குதல்களில்
அப்பாவி மக்கள் உயிரிழந்
துள்ளனர். இதனுடன்
தொடர்புடைய குற்றவாளி
கள் அனைவரும் கைது
செய்யப்பட வேண்டும் என
வும், அவர்களுக்கு உச்ச
பட்ச தண்டனை வழங்கப்
பட வேண்டும் எனவும்
பிரதமர் ரணில் விக்கிரமசி
ங்கவை நேரில் சந்தித்து
வலியுறுத்தியுள்ளேன்.
இதேவேளை, இலங்கை
யில் பல இடங்களில் குண்
டுகள் மீட்கப்பட்டும் வரு
கின்றன. தீவிரவாதிகளின்
வெறியாட்டம் தொடரக்கூ
டும். எனவே, வடக்கு, கிழக்
குவாழ் தமிழ் மக்கள் மிக
வும் அவதானமாக இருக்க
வேண்டும். எமது மக்கள்
தத்தமது பாதுகாப்பை உறு
திப்படுத்திக்கொள்ளவேண்
டும் - என்றார். (எ-22)

# மக்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23
நல்லூர் பிரதேச சபை எல்
லைக்குட்பட்ட பகுதிகளில்
மக்கள் பங்களிப்புடனான
அபிவிருத்தி வேலைத் திட்
டங்கள் மேற்கொள்வது
தொடர்பாக, நடைபெற்று
வந்த மக்கள் சந்திப்பு பிற்
போடப்பட்டுள்ளது.
நாட்டில் ஏற்பட்டுள்ள அசா
தாரண சூழ் நிலையால்
மக்கள் சந்திப்பு பிற்போடப்
பட்டுள்ளதாக நல்லூர் பிர
தேச சபைத் தவிசாளர் த.
தியாகமூர்த்தி தெரிவித்தார்.
பிரதேச சபை வட்டார ரீதி
யாக முன்னெடுக்கப்ப
டவுள்ள அபிவிருத்தி திட்டங்
கள் , திட்ட வரைபுகள்,
தேவைப்பாடுகள் , குறித்து
வட்டார ரீதியாக மக்களின்
கருத்துக்களை கேட்கும் மக்
கள் சந்திப்பு நடத்தபட்டு
வந்தன.
இந்நிலையில் நேற்று திங்
கட்கிழமை மற்றும் இன்று
செவ்வாய்க்கிழமை நடை
பெற விருந்த கலந்துரையா
டல்கள் பிற்போடப்பட்டு உள்
ளன.
இன்றைய தினம் கொக்கு
வில் பிடாரி அம்மன் ஆலய
மண்டபத்தில் 5ஆம் வட்
டார (ஜே/99, J/125,
ஜே/127) மக்கள் சந்திப்பும்,
அரியாலை முள்ளி யூதா
கோயிலில் 11ஆம் வட்டாரத்
துக்கு (ஜே/94 , ஜே/96)
உரிய மக்கள் சந்திப்பும்
மாலை 3.30 மணிக்கு
நடைபெறவிருந்தன.
குறித்த இரு கலந்துரையா
டல்களும் பிற்போடப்பட்டு
ள்ளதாகவும், கலந்துரையா
டல் நடைபெறும் திகதி பின்
னர் அறிவிக்கப்படும் என
வும் சபைத் தவிசாளர் த.
தியாகமூர்த்தி தெரிவித்துள்
ளார். (ஐ-37)

# ஊரடங்கு நேரத்தில் பயணித்தனரென இருவர் கைது

சாவகச்சேரி,ஏப்.23
ஊரடங்கு நேரத்தில் பயணித்தனர் என்ற
குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்
பட்டு அரைமணி நேரம் தடுத்து வைக்
கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு
7.15 மணியளவில் வரணி முள்ளிப் பகு
தியில் இடம்பெற்றது.
அரச பெண் பணியாளரும் அவரது
சகோதரருமே வீதிப் போக்குவரத்துக்
கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால்
கைது செய்யப்பட்டனர்.
வரணி முள்ளிப் பகுதியில் அரைமணி
நேரம் தடுத்து வைக்கப்பட்டு பின்னர்
தமிழ் பொலிஸ் அலுவலர் வந்து விடுவித்
துள்ளார்.
குறித்த அலுவலகர் கிளிநொச்சி மாவட்ட
சமூக சேவைகள் அலுவலகத்தினரால்
பூநகரிப் பிரதேச முட்கொம்பன் மற்றும்
பள்ளிக்குடா பிரிவுகளைச் சேர்ந்த முதி
யோர் சங்க உறுப்பினர்களை
ஆன்மீக வழிபாட்டுக்காக திருகோண
மலைக்கு நேற்றுமுன்தினம் காலை
அழைத்துசென்றுள்ளார்.
அதன் பின்னர் ஆன்மீகச் சுற்றுலாவை
முடித்துக்கொண்டு கிளிநொச்சியில்
இருந்து கொடிகாமத்துக்கு பயணித்து
அங்கிருந்து உந்துருளியில் தனது சகோ
தரருடன் வடமராட்சிக்குச் சென்றுள்ளார்.
அவ்வேளையில் வரணி முள்ளிப் பகுதி
யில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்
பில் நின்ற பொலிஸார் மறித்து
விசாரித்துள்ளனர்.
காலையில் முதியோர்களுடன் திருகோ
ணமலைக்குச் சென்று திரும்பியதாக
பெண் அலுவலர் தெரிவித்த போதிலும்
மொழி தெரியாததால் நெல்லியடிப்
பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்து
அங்கிருந்து வந்த தமிழ் பொலிஸ் அலு
வலர் விவரங்களைக் கேட்டறிந்து அவர்
களை விடுவித்ததார் எனத் தெரிவிக்கப்
பட்டது. சனநடமாட்டமில்லாத இருட்டு
வேளையில் பற்றைப் பகுதியான பகுதி
யில்தம்மை மறித்த வைத்தமை குறித்து
பெண் அரச அலுவலகர் மன உழைச்ச
லுக்கு உள்ளாகியுள்ளார் எனவும் தெரி
விக்கப்பட்டது. (ஐ -9)

# தீவிரவாதக் குழுக்களை கூண்டோடு ஒழிப்போம்;

## குற்றவாளிகளுக்கு அதியுட்ச தண்டனை உறுதி தலைமை அமைச்சர் ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.23
உயிர்த்த ஞாயிறு தினமன்று இலங்
கையில் இரத்த ஆறு ஓடியுள்ளது.
அப்பாவி மக்கள் பலர் கொடூரமான
முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.
வெளிநாட்டுக் குடிமக்களும் பலியாக்
கப்பட்டுள்ளனர். குண்டு வெடிப்புகள்
மூலம் இந்தப் படுகொலைகளை
அரங்கேற்றிய குற்றவாளிகள் தப்பிப்
பிழைக்க ஒருபோதும் இடமளி
யோம். அவர்களுக்கு அதியுட்ச தண்
டனையை வழங்குவோம். இது
உறுதி. அத்துடன், இலங்கையில்
புதிதாகத் தோற்றம் பெற்றுள்ள தீவிர
வாதத் குழுவைக் கூண்டோடு
ஒழிப்போம்.
இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்
தார் தலைமை அமைச்சர் ரணில்
விக்கிரமசிங்க.
இலங்கையில் நேற்றுமுன்தினம்
ஞாயிற்றுக்கிழமை 8 இடங்களில்
இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச்
சம்பவங்களில் வெளிநாட்டுப் பிரஜை
கள் உட்பட 290க்கும் அதிகமானோர்
கொல்லப்பட்டமை தொடர்பில் சர்வ
தேச செய்திச் சேவையொன்றுக்குக்
கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்
மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் இப்படியொரு மனிதப்
பேரவலம் இடம்பெறும் என்று நாம்
நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.
கிறிஸ்தவர்களின் வாழ்வில் மறக்க
முடியாத நாளில் எமது நாட்டு மக்க
ளும் வெளிநாட்டுப் பிரஜைகளும்
ஈவிரக்கமின்றி சாவடிக்கப்பட்
டுள்ளனர்.
இலங்கையில் தோற்றம் பெற்றுள்ள
ஒரு புதிய தீவிரவாதக் குழுவே குண்
டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்
ளது. இந்தக் குழுவின் முக்கிய புள்ளி
களை நாம் மடக்கிப் பிடித்துள்ளோம்.
இவர்கள் சர்வதேசத்தின் பின்னனி
யில் செயற்பட்டார்களா என்பது
தொடர்பில் ஆழமாக ஆராய்கின்
றோம். தீவிர விசாரணைகளின் பின்
னர் உண்மைகள் வெளிவரும்.
குண்டு வெடிப்புத் தாக்குதல்களில்
உயிரிழந்த எமது நாட்டு மக்கள் மற்
றும் வெளிநாட்டுப் பிரஜைகள் ஆகி
யோரின் குடும்பத்தி னருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
இந்த மிலேச்சத்தனமான வன்மு
றையை உலக நாடுகள் கண்டித்துள்
ளன. அந்த நாடுகளின் தலைவர்கள்,
இலங்கையில் தோற்றம் பெற்றுள்ள
புதிய தீவிரவாதக் குழுவை முற்றாக
இல்லாதொழிக்க எமக்குப் பூரண
ஆதரவைத் தருவதாக வாக்குறுதிய
ளித்துள்ளனர். எனவே, இலங்கை
யில் புதிதாகத் தோற்றம் பெற்றுள்ள
தீவிரவாதத் குழுவைக் கூண்டோடு
ஒழிப்போம். குற்றவாளிகள் தப்பிப்பி
ழைக்க ஒருபோதும் இடமளியோம்.
அவர்களுக்கு அதியுட்ச தண்ட
னையை வழங்குவோம். இது
உறுதி" - என்றார். (எ-22)

# கொழும்பு பேரவலத்துக்கு யாழ். பல்கலை அஞ்சலி!



கொழும்பு, ஏப். 23
கொழும்பு, மட்டக்களப்பு
உள்ளிட்ட பகுதிகளில் நேற்
றையதினம் இடம்பெற்ற
குண்டு வெடிப்பில் கொல்
லப்பட்டவர்களுக்கு யாழ்ப்
பாணப் பல்கலைக் கழக
மாணவர்கள் நேற்று அஞ்
சலி செலுத்தினர். (ம-37)

# தமிழ்முஸ்லிம் இளைஞர்கள் வாய்த்தர்க்கமும் கைகலப்பும்

யாழ்ப்பாணம், ஏப். 23
சுன்னாகத்தில் ஒரே கடையில் பணியாற்
றிய முஸ்லீம் தமிழ் இளைஞர்கள்
இடையே நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்
புத் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம்
மோதலாக மாறிய நிலையில் அவர்கள்
இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்
பட்டனர்.
இருவரும் மாறிமாறி மோசமான வார்த்
தைகளைப் பயன்படுத்தியதை அடுத்து
அது கைகலப்பாக மாறியது. இருவரும்
ஒருவரை ஒருவர் மாறிமாறி தாக்கியதை
அடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸா
ருக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார்
அவர்கள் இருவரையும் கைது செய்தனர்.
பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட
னர். (ம-105)

## சொற்பொழிவாளர் சுப்பிரமணியம் காலமானார்

யாழ்ப்பாணம்,ஏப்.23
தமிழகத்தின் பிரபல ஆன்மிகப் பேச்சாளரும் பட்டிமண்டபப் பேச்சாளருமாகிய முனைவர் தா.கு. சுப்பிரமணியம் கடந்த சனிக்கிழமை இரவு காலமானார்.
இறக்கும்போது அவருக்கு வயது 72. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், வைணவ இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.
இலங்கையில் நடைபெற்ற கம்பன் விழாக்களில் தெள்ளு தமிழில் பேசி பலரது பாராட்டடைப் பெற்றவர். இறுதிக் கிரியைகள் நேற்று மதுரையில் இடம்பெற்றன. (க)

## புல்லுக்குள படிக்கட்டு அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23
முற்றவெளியில் உள்ள புல்லுக்குளத்தின் ஒருபகுதி பாதுகாப்பு அணைக்கட்டு உடைக்கப்பட்டு படிக்கட்டு அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கலாசார நிலைய மண்டபத்தின் வளாகத்துக்கு அருகில் உள்ள இந்த புல்லுக்குளமும் அழகுபடுத்தப்பட்டுள்ளது.
தற்போது குளக்கரையில் இந்த பாதுகாப்பு அணைக்கட்டு உடைக்கப்பட்டு அதற்கு பதிலாக படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டும் வருகின்றன. (க-17)

## குருதிப் பரிசோதனைபோன்று

# சளிப்பரிசோதனையும் கட்டாயம் அவசியம்

*யாழ்ப்பாணம், ஏப். 23*
*யாழ்ப்பாண மாவட்டத்தில் நோய்களுக்குக் குருதிப் பரிசோதனை செய்வதைப் போன்று சளிப் பரிசோதனையும் அவசியம் என்று காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:*

யாழ்ப்பாண மாவட்டத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் மருத்துவம் மற்றும் சிகிச்சை என்ற வகையில் அதனை வழங்குவதற்கு வளங்கள் பற்றாக்குறையாகவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பண்ணை மற்றும் கோப்பாய்ப் பகுதியில் இதற்கான சிகிச்சை நிலையங்கள் உள்ளன. பண்ணை நிலையம் நோயைக் கண்டு பிடிக்கும் இடமாகவும், கோப்பாய் நிலையம் நோய்க்கு சிகிச்சை வழங்கும் நிலைய மாகவும் உள்ளன. ஆனால் நாள் ஒன்றுக்கு ஒரு நோயாளர் என்றாலும் இனம் காணக் கூடிய நிலை காணப்படுகிறது. ஆனால் விடுதியில் 10 ஆண் ,10 பெண் நோயாளர்களை. வைத்து சிகிச்சை வழங்கக் கூடிய வசதியே உள்ளது. ஆகவே காச நோய்க்கு மருத்துவ மனை ஒன்று அவசியம். அதே போன்று ஏனைய மருத்துவமனைகளுக்கு நோயாளர் சென்றால் குருதிப் பரிசோதனை முதன்மையாகச் செய்யப்படுகிறது. அதே போன்று சளிப் பரிசோதனையும் செய்தால் காச நோயை ஆரம்பத்தில் இனம் கண்டு சிகிச்சை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

**தரவுகள்**
இந்த வருடத்தில் இது வரை 8 காச நோயாளர்கள் இறந்துள்ளனர்.100 நோயாளர்கள் வரை இனங்காணப்பட்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டு சுமார் 35பேரும், 2018 ஆம் ஆண்டு 22 பேரும் இறந்துள்ளனர். 2030 ஆம் ஆம் ஆண்டு காச நோய் அற்ற நாடாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் காச நோய்க்கான அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)

## சவூதியில் கோர விபத்து: மருதமுனை இளைஞர் சாவு மேலும் இருவர் படுகாயம்

கொழும்பு,ஏப்.23
சவூதி அரேபியாவில் இடம்பெற்ற கோர விபத்தில் அம்பாறை மாவட்டம், மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
முகம்மட் ரிஹாஸ் உவைஸ் என்ற இளைஞர் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
விபத்தில் மருதமுனையைச் சேர்ந்த மேலும் இருவர் ஆபத்தான நிலையில் சவூதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
கடந்த வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் உணவு உண்பதற்காக இவர்கள் மூவரும் சவூதி அதிவேகப் பாதை வழியே சென்று கொண்டிருக்கும்போது பின்னால் வந்த கார் இவர்கள் சென்ற வாகனத்துடன் மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளது.
விபத்தில் சிக்கிய மூவரும் மருதமுனையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஒருவர் சம்பவ இடத்தில் சாவடைந்துள்ளார். ஏனைய இருவரில் ஒருவரின் கால் ஒன்று அகற்றப்பட்டுள்ளது என்வும், மற்றையவர் கோமா நிலையில் இருக்கின்றார் எனவும் தெரியவருகின்றது.
இந்த விபத்து தொடர்பில் சவூதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-222)

## உலருணவுப் பொதிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23
மயிலிட்டித்துறை வடக்குப் பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்ட தாய்மார்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உலருணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டது.
சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் மயிலிட்டித்துறை வடக்குப் பிரதேச மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரும் மக்கள் முன்னேற்றக் கூட்டணியின் செயலருமான கணேஸ்வரன் வேலாயுதம் பொதிகளை வழங்கிவைத்தார்.



94 தாய்மார்களுக்கு உலருணப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மல்லாகம் வீதியை சீரமைக்கக் கோரிக்கை

ஏழாலை, ஏப். 23
மல்லாகம், சுன்னாகம் தொடருந்து நிலைய வீதி நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழை காலத்தில் போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர் கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
மல்லாகம்,சுன்னாகம் தொடருந்து நிலையங்களுக்கு இடைப்பட்ட சுமார் 2கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்தவீதி முழுமையாகச் சேதமடைந்திருக்கிறது. பலரிடமும் இது பற்றிக் கோரிக்கை விடுத்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
விரைவில் சீரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படு கின்றது.
(து)

### தேசிய...

லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே துக்கம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஏப்ரல் 23ஆம் திகதியை துக்கநாளாக அறிவித்துள்ளார். (ஒ.5)

### பதவியை...

விரைவில் குணமடையவேண்டும் என்று சர்வமத வழிபாடும் நடைபெற்றது.
இதன் பின்னர் ஊடகவியாளர்களின் கேள்விக்கு மகிந்த பதிலளித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை வெளியிடுவதோடு தாக்குதல் சம்பவங்களை மிக வன்மையாக கண்டிக்கின்றேன். மேலும் இந்த நாட்டில் முதற்தடவையாக வெளிநாட்;டு குடிமக்களும் உயிரிழந்துள்ளார்கள். அவர்களுக்கு எனது சிறப்பு இரங்கல்களை வெளியிடுவதோடு எமது நாட்டிற்குப் பெரிய உதவிகளை செய்த அமெரிக்க குடிமகனின் மனைவியின் இழப்புக்கும் எனது இரங்கல்களை வெளியிடுகின்றேன்.
இந்தக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் அரசுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுதொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் மக்களிற்கு அறிவித்திருந்தால் இத்தகைய இழப்புக்கள் நடைபெற்றிருக்காது.
புலனாய்வு துறையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். எஞ்சியவர்களையும் சிறையில் அடைத்து வைத்தால் இன்னமும் சிறப்பாக இருக்கும். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று நாம் முன்பிருந்தே கூறிவந்தோம். இருப்பினும் அவ்வாறான எந்தவிடயமும் இல்லை என்று அரசு மறுதலித்தே வந்திருந்தது.
மேலும் அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் காணப்படுகின்ற மோதல்கள் தொடர்பில் என்னையும் விட உங்களுக்கு நன்றாகவே தெரியும். அதுதொடர்பாக நான் ஏதும் கூறவேண்டியதில்லை.
நேற்று(நேற்று முன்தினம்) நடைபெற்ற கூட்டத்தில் தலைமை அமைச்சர் மற்றும் அரச தரப்பினரிடத்தில், இந்த விடயம் சம்பந்தமாக முன்தாகவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனை அறிந்துகொண்டு ஏன் நடவடிக்கை எடுக்காது இருந்தீர்கள்.எமக்கு பாதுகாப்பு எச்சரிக்கை அளிக்கும் வகையில் அறிவித்தல் விடுத்திருந்த நீங்கள் மக்களுக்கு ஏன் அறிவுறுத்தல் விடுத்து எச்சரித்திருக்கவில்லை. பாதுகாப்பை அதிகரித்திருக்கவில்லை.
மேலும் இந்த விடயம் முன்கூட்டியே அறியப்பட்டு அதுதொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் எவ்வாறு அழுத்தங்கள் வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள் என்று கேள்வி எழுப்பினேன். அதுமட்டுமன்றி இந்த விடயம் சம்பந்தமாக 90பேர் வரையிலான பெயர் விவரங்கள் ஏற்கனவே பொலிஸாரிடத்தில் இருக்கின்ற நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்ககளை முன்னெடுக்கப்பட்டபோது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதனை யார் பிரயோகித்தார்கள் என்று கேள்வி எழுப்பினேன்.
உண்மையிலேயே அரசு இந்தவிடயத்தைப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும். இலங்கையில் அவ்வாறு நடக்குமா? மேலும் அவர்களால் தான் இந்தப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டார். அவர்கள் அவரை நியமிப்பதற்கு பறந்து திரிந்தார்கள். அரசின் செல்லப் பிள்ளையாகத்தான் பொலிஸ் மா அதிபர் உள்ளார். அந்த வகையில் அவர்களே முழுப்பொறுப்பபையும் ஏற்கவேண்டும் - என்றார். (ஒ.5,61)

### 11 பேர்...

ஸார் தெரிவிக்கின்றனர். நேற்று மாத்திரம் 11பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகளை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இலங்கை அரசின்தேசியபகுப்பாய்வுத்திணைக்களமும் சகல இடங்களிலும் நடத்தப்பட்டது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்தான் என்று அறிவித்துள்ளது.
இந்தக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் துரித நடவடிக்கை எடுத்திருந்தனர். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெமட்டக்கொட, பாணந்துறை ஆகிய இடங்களிலிருந்து 13பேரைக் கைது செய்திருந்தனர். மேலும் 11பேரைத் தேடி வந்தனர். இந்த நிலையில் பல்வேறு பிரதேசங்களில் வைத்து 11பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஒ.5)

### 31 பேர்...

டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நட்சத்திர விடுதிகளில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 31 வெளிநாட்டவர்கள் உயிரிழந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
பங்களாதேசைச் சேர்ந்த ஒருவரும், சீனாவைச் சேர்ந்த இருவரும், இந்தியாவைச் சேர்ந்த 8 பேரும், பிரான்ஸைச் சேர்ந்த ஒருவரும், ஜப்பான், நெதர்லாந்து, ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல்லைச் சேர்ந்த தலா ஒவ்வொருவரும், துருக்கி, சவுதி அரேபியாவைச் சேர்ந்த தலா இருவரும், பிரிட்டனைச் சேர்ந்த 7பேரும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 2 பேரும், அமெரிக்காவைச் சேர்ந்த 2 பேருமாக 31பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 14பேரின் நிலமை இதுவரை தெரியவில்லை. இதேவேளை 17 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

### தொடரும்...

னம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியிலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. நேற்றுக் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. ஆனாலும் பொது மக்களின் நடமாட்டங்கள் வீதிகளில் குறைவாகவே காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று இரவு மீண்டும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது. (ஒ.5)

see more news in
NEWUTHAYAN.COM

## கொச்சிக்கடையில்...

போது கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. 70பேர் வரையில் உயிரிழந்திருந்தனர். இந்த நிலையில் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீதியில் சந்தேகத்துக்கு இடமான வான் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் வெடிகுண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சிறப்பு அதிரடிப் படையினர் அங்கு விரைந்தனர். வாகனத்தைச் சோதனையிட்டனர். குண்டு பொருத்தப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பகுதியிலிருந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட பின்னர், குண்டை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்போது அந்தக் குண்டு வெடித்துச் சிதறியதில் வான் சுக்குநூறானது. இந்த வானில், உள்ளூர் தயாரிப்பு வெடிகுண்டே பொருத்தப்பட்டிருந்துள்ளது. 4 சமையல் எரிவாயுச் சிலிண்டர்களை இணைத்துப் பொருத்தப்பட்டிருந்தது. இந்த வெடிகுண்டில் நூல் ஒன்று கட்டப்பட்டு அதன் மறு நுனியில், ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் ஒன்று கட்டப்பட்டு இருந்தது. ஆயிரம் ருபாவுக்கு ஆசைப்பட்டு யாராவது அதனை எடுக்க முற்படும்போது, வெடிகுண்டு வெடிக்கும் வகையிலேயே சூட்சுமமான முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ.5)

## அவசரகாலச்...

அரச தலைவர் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் தேவையான அதிகாரத்தை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய அமைப்புக்கள், அது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பயங்கரவாதிகள் மற்றும் அதற்கு அனுசரணை வழங்கிய அனைத்து நாசகார சக்திகளையும் முழுமையாக அழிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச தலைவர் பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார். (ஒ.5)

## தெமட்டகொடவில்...

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் தொடர் குண்டு வெடிப்புக்கள் நடத்திருந்தன. தாக்குதல் இடம்பெற்ற இடங்களுக்கு அண்மையாகவுள்ள மறைகாணிகள் (சி.சி.ரி.வி.) சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. கிங்ஸ்பெரி ஹோட்டலில் குண்டை வைத்ததாக நம்பப்படும் நபர் தொடர்பில் பொலிஸார் தகவல்களைத் திரட்டியுள்ளனர். உடனடியாக கொழும்பின் புறநகர் பகுதியான தெமட்டகொடவில் தாக்குதலாளிகள் மறைந்து தங்கியிருப்பதாக முதல்கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

தெமட்டகொட குடியிருப்புப் பகுதியைச் சுற்றி வளைத்துள்ளனர். தாக்குதலாளிகள் என்று சந்தேகிப்போரை கைதுசெய்ய முற்பட்டபோது அவர்கள் குண்டை வெடிக்க வைத்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். இதனால் 3 பொலிஸார் உயிரிழந்திருந்தனர். அத்துடன் ஒரு பெண் மற்றும் இரு சிறுமிகளின் சடலங்களும் மீட்கப்பட்டிருந்தன. (எ-22)

## ஐ.எஸ்...

கின்றது.

இந்தநிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இணைய நடவடிக்கைகளையும், சமூக வலைத்தள நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் சயிட் என்னும் புலனாய்வு அமைப்பு இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதலை அந்த அமைப்பினர் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

குண்டுத் தாக்குதல்களுக்கு ஆதரவும், மகிழ்ச்சியும் தெரிவித்துக் கருத்துக்களைப் பகிர்ந்துள்ள அந்த அமைப்பின் ஆதரவாளர்கள், தற்கொலைதாரிகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்வார் என்று சமூக வலைத் தளங்களில் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைக் கொண்டு நோக்கும்போது இந்தத் தாக்குதல்கள் சில காலங்களுக்கு முன்னரே திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன என்று தென்படுகின்றது என்றும். இந்தத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் சயிட் அமைப்பின் பணிப்பாளர் ரிடா காட்ஸ் தெரிவித்துள்ளார். (எ)

## இன்ரபோல்...

ரணைப் பிரிவின் அதிகாரிகள் கொழும்பு வந்து விசாரணைகளுக்கு உதவி வருகின்றனர் என்று பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

எவ்பிஐ அதிகாரிகள் நேற்று வந்துள்ளனர். அவர்கள் எமக்கு உதவிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னரபோல் நிபுணர்கள் இன்று வரவுள்ளனர்.

ஆஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகள் குழுவும் விசாரணைக்கு உதவுவதற்காக கொழும்பு வரவுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## மக்கள்...

வங்கள் அதிகரித்துள்ளன. வடக்கிலும் பல பொலிஸ் நிலையங்களில் மக்கள் முறைப்பாடுகள் செய்துள்ளனர் என்று அறிய முடி கின்றது.

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய தென் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை தாழ்வுபாட்டு கிராம மக்கள் நேற்று திங்கட்கிழமை காலை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

முச்சக்கர வண்டியில் தாழ்வுபாட்டு கிராமத்துக்குள் பயணித்துள்ளதோடு, தாழ்வுபாட்டு தேவாலய பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியுள்ளனர். கிராம மக்கள் அவர்களிடம் நீங்கள் யார்? எதற்காக இங்கே வந்தீர்கள் என கேட்டதிற்கு முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கதைத்துள்ளனர். உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையினை பரிசோதித்த போது அவர்கள் 25 மற்றும் 35 வயது மதிக்கத்தக்க கொழும்பு மற்றும் நிட்டம்புவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

கிராம மக்கள் ஒன்று கூடியதை அவதானித்த பொலிஸார் விரைந்து செயற்பட்டு சந்தேக நபர்களை கைது செய்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதோடு, அவர்கள் பயணித்த முச்சக்கர வண்டியையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையிலும் மக்கள் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் நபர் ஒருவரிடம் விசாரணை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் வீடு வாடகைக்கு எடுத்து வசித்து வந்த சாய்ந்தமருத்தைச் சேர்ந்த ஒருவரின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த பிரதேச மக்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர் என்றும் பொலிஸார் அந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலைக்கு அண்மையில் நேற்றிரவு சந்தேகத்துக்கு இடமானவர்கள் நடமாடினர் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்துப் பொலிஸார் அது தொடர்பாகவும் ஆராய்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேசத்தில் ஆலயம் ஒன்றுக்குச் சென்ற ஒருவர் ஆலயத்தின் பூசை வேளைகளைக் கேட்டறிந்தார் என்றும் அது தொடர்பாகச் சந்தேகமடைந்த மக்கள் பொலிஸாருக்குத் தெரிவியப்படுத்தினர் என்றும், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ஒ.5,56)

## துப்பாக்கி...

மீட்கப்பட்டுள்ளன என்று வானூர்திப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

ரி56 ரக துப்பாக்கிகளின் ரவைகள் 152 மற்றும் 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் 8 என்பன மீட்கப்பட்டுள்ளன. இவற்றை வைத்திருந்த சந்தேகத்தில் தந்தையும் இரண்டு மகன்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (து)

## எச்சரிக்கையை...

உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இவற்றுக்குப் பொறுப்பேற்று பொலிஸ்மா அதிபர் (ஐ.ஜி.) பதவிவிலகவேண்டும். இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தை தொடர்ந்து அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனை தெரிவித்தார். அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஊடகவியலாளர் சந்திப்புக்கு சற்று நேரத்துக்கு முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இவ்விடயம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற பெரிய தாக்குதல் சம்பவம் குறித்து அரசு கவலையடைகின்றது. இவ்விடயம் தொடர்பான பொறுப்புக்கூறலில் இருந்து அரசு ஒருபோதும் விலகப் போவதில்லை. இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவம் மற்றும் அதனால் ஏற்பட்ட அழிவுகள் குறித்து அரசு முழுமையாகப் பொறுப்பேற்றுக் கொள்கின்றது. இத்தகைய தாக்குதல் சம்பவம் இடம்பெறப் போவதாக முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் கூட, அதனைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாமை குறித்து மிகுந்த கவலையடைவதுடன், நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

பெரிய சேதம் நிகழ்ந்து முடிவடைந்துள்ள நிலையில், இது தொடர்பில் விரைவான விசாரணைகளை முன்னெடுப்போம் என்பதுடன், அரசின் சார்பில் இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றோம். குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னரே எச்சரிக்கை அனுப்பட்டுள்ளதாக தற்போது நாங்கள் அறிந்திருக்கின்றோம். அத்தகவல்கள் எவற்றையும் மறைக்காமல் பகிரங்கப்படுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

பெரியதாக்குதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக கடந்த 4 ஆம் திகதி பன்னாட்டுப் புலனாய்வுப் பிரிவொன்று அறிவுறுத்தியிருக்கின்றது. குண்டுத்தாக்குதல்கள் நடைபெறும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டு தேசிய தவ்ஹீத் ஜமாஅத் என்ற அமைப்பைச் சேர்ந்த சந்தேகநபர்களின் பெயர்களையும் உள்ளடக்கி, கடந்த 9 ஆம் திகதி பாதுகாப்புச் செயலாளருக்குப் பதிலாக தேசியப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் பொலிமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 11 ஆம் திகதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் இவ்விடயம் குறித்து அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், நீதியரசர்கள், ஓய்வுபெற்ற அரச தலைவர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், ஓய்வுபெற்ற அரச தலைவருக்கான பாதுகாப்புப் பிரிவில் மேலதிக பணிப்பாளர், இராஜதந்திரிகள் பாதுகாப்புப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் ஆகியோருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். இதில் அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவும், தலைமை அமைச்சர் பாதுகாப்புப் பிரிவும் உள்ளடக்கப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சுக்கு அரச தலைவரே பொறுப்பானவர் என்பதால் அவரது பெயர் குறிப்பிடப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது தொடர்பில் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்விடயம் குறித்து எத்தகைய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தான் தற்போதைய கேள்வியாக இருக்கின்றது. தாக்குதல் குறித்து முன்னரேயே எமக்கு அனைத்து விவரங்களும் கிடைக்கப்பெற்றிருந்தும் கூட, அதனைத் தடுக்க முடியாமல் போயுள்ளது. முதலில் இது தொடர்பிலேயே விசாரிக்க வேண்டும். அதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு இவ்விடயம் பற்றி முழுமையாக ஆராய வேண்டும். தாக்குதல் இடம்பெறப் போவதாக யாருக்கு முன்னறிவித்தல் கிடைக்கப்பெற்றது? அவை தலைமை அமைச்சருக்கு நேற்று வரை அறிவிக்கப்படாதது ஏன்? பாதுகாப்பு அமைச்சால் இவ்விடயம் குறித்து முன்னெடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊடகங்களில் இந்த முன்னெச்சரிக்கை வெளிவந்த பின்னரும் கூட நாங்கள் அது குறித்து அறியவில்லை என்பது ஆச்சரியமளிக்கின்றது. ஆனால் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றதிலிருந்து எம்மாலான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். இந்த தாக்குதல் உள்நாட்டைச் சேர்ந்த குழுவொன்றால் மாத்திரம் நடத்தியிருக்க முடியாது. இந்தத் தாக்குதலில் பின்னணியில் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட மிகப் பெரியதொரு தீவிரவாத வலைப்பின்னல் இருக்குமென்று கருதுகிறோம் - என்றார். (ஒ.5)

## மர்மக்...

சமிக்கையுடன் பரோடா ரகக் கார் ஒன்று தரித்து நின்றதால் பதற்ற நிலமை தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்றுப் பகல் 11 மணியளவில் அவதானிக்கப்பட்ட ஓர் வாகனம் மாலை 5 மணியை தாண்டியும் அதே இடத்தில் தரித்து நின்றுள்ளது. பரோடோ வகையான புதிய ரக வாகனம் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான குறித்த வாகனம் தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தார். அது தொடர்பில் சிறப்புப் அதிரடிப்படையினருக்கும் தகவல் வழங்கப்பட்டதனையடுத்து சிறப்பு அதிரடிப்படையினரும் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அதன்பின்னர் வெடிக்குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் கொழும்பில் இருந்து இன்று காலையே சம்பவ இடத்துக்கு வர முடியும் என்பதால் அந்தப் பகுதிக்குத் தற்போது சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. (எ-105)

## நாளை ...

துக்கதினமாக அறிவித்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில், மாவை சேனாதிராசா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


கிறிஸ்த்து உயிர்த்த நாளில் கொழும்பிலும், சுற்றுப் பிரதேசங்களிலும், மட்டக்களப்;பிலும் தற்கொலைக் குண்டுதாரிகளினாலும் ஏனைய இடங்களில் மர்மமான முறைகளிலும் தேவாலயங்களையும், பிரபல விடுதிகளையும் குறிவைத்துப் பயங்கரக் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. நூற்றுக் கணக்கான இலங்கை மக்களும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் கொல்லப்பட்டும், காயமடைந்தும் தீவிர சிகிச்சைக்கு ஆளாகியும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறப் போகிறதென இலங்கை பாதுகாப்பு, உளவுத்துறைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அரசு பாதுகாப்புத்துறை இவ்விடயங்களில் முன்கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளது. இத்தகைய செயல்களை ம்ட்டுமல்ல உளவுத்துறையின் செயலற்ற நிலைமைகளையும் குறிப்பிட வேண்டும். இப் பயங்கரச் செயல்களால் உயிரிழந்த, காயமடைந்த, இழப்புக்களைச் சந்தித்துத் துயரத்தில் வீழ்ந்து கிடக்கும் குடும்பங்களுடன் துயர்பகிர வேண்டியது எமது மனிதாபிமானக் கடமையாகும். இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும். கண்டனம் தெரிவிக்க வேண்டும். இனியொரு இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவோம்.

இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக, மனிதாபிமானமிக்க மனிதர்கள் ஒன்றாக ஒற்றுமையாக எம் கண்டனத்தை வெளிப்படுத்துவோம். இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடுவோம். அவலத்தில் வீழ்ந்து இழப்புக்களால் துயருறும் மக்களுடன் நாம் அவர்கள் கண்ணீரில் கலந்து துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு நாளை புதன்கிழமை துக்க நாளாகக் கடைப்பிடிப்போம். அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அழைக்கின்றோம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

# நெஞ்சை விட்டகலா நினைவுகளில்

# முதலாம் ஆண்டு



## அமரர் செல்லர் சிவசரவணமுத்து

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 29.01.1972 | 05.05.2018 |

ஆண்டு ஒன்று ஆனதுவே
நீவீர் ஆண்டவனிடம் அடைக்கலமாகி
நிம்மதியின்றி தவிக்கின்றோம்
ஆறுதல் தர வருவாயோ
நூல் அறுந்த பட்டம் போல ஆனோமே
ராசா அருகில் நீ இல்லாமல்
கண்ணை இமை காப்பது போல்
எமைக் காத்த இதயமே
என்றும் எமைக் காத்திடுவீர்

ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

குமரநகர்,
கைதடி மத்தி, கைதடி.

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மச்சான்மார், மருமக்கள்.

(N 10011) (4.17)

## மரண அறிவித்தல்



### Dr. கணபதிப்பிள்ளை நடராஜா

**(ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி)**

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கணபதிப்பிள்ளை நடராஜா கடந்த 20.04.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், ஜனனி (கனடா), ஹம்ஸா (ஆசிரியை, யா/நெல்லியடி மத்திய கல்லூரி) சுகன்யா (கனடா), கவிதா (கனடா), விஸ்ணுகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதல ஷ்மியின் அன்புச் சகோதரரும், புஸ்பநாதன் (கனடா), மகிந்தன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), கிருபாகரன் (கனடா), நாவேந்தன் (கனடா), நிரோஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பசுபதி மற்றும் தம்பிஐயா, தங்கம்மா (மேரிகிரிஸ்ரின்), சுந்தரேஸ்வரன், செல்வராசா, கணபதிப்பிள்ளை, பரமநாதன், காலஞ்சென்ற அருந்தவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சௌமியா, அபிலாஷ், கஜானி, அபிநயா, ஜதுஷன், கஜீபன், பிரணன், சேயோன், சேரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.82/18, செட்டித்தெரு,
நல்லூர்.**


**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS/24880)(11.17)

**077 501 8189, 021 222 6913**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு பஞ்சலிங்கம்



திருநெல்வேலிமணல் தரையைப்பிறப்பிடமாகவும் கைலாசபிள்ளையார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர வேலு பஞ்சலிங்கம் கடந்த 20.04.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-செல்வமணி தம்பதிகளின் மகனும், சுந்தரலிங்கம், பாக்கிய லட்சுமி, விஜயலட்சுமி, இராச லட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை சிவன்வீதி பரவைக்குளம் திருநெல்வேலியில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/23835)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மாநாடு ஒத்திவைப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை காரணமாக எதிர் வரும் 26ம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற விருந்த தமிழ் அரசுக்கட்சியின்தேசியமாநாடுஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தேசிய மாநாடு 3 தினங்களாக இடம்பெற்று புதிய நிர்வாகத் தேர்வுகள் மற்றும் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ள விருந்த நிலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்து தொடர்ந்தும் அசாதாரண நிலமை நீடிப்பதனால் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதேநேரம்யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில் அமைக்கப்பட்ட தந்தை செல்வா ஞாபகார்த்த புதிய மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவிருந்த சூழலில் இந்த நிகழ்வும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-105)


**வாடகைக்கு**
யாழ்.நகரில் சிற்றுண்டிச்சாலை உள்ளூர் உற்பத்தி குரோஸரி மற்றும் சகல வியாபாரத்துக்கு ஏற்ற கடை வாடகைக்கு விடப்படும். (CS/24827)(11.17)
**077 998 1896, 075 098 3921**

**வீடு வாடகைக்கு**
பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
**077 654 4574**

**மணல் விற்பனைக்குண்டு**
கட்டு மணல், பூச்சு மணல், கல், சல்லி என்பன பெற்றுக்கொள்ளலாம்.
**077 410 5294** (AVA/515)(11.17)

**காணி தேவை**
20 ஏக்கருக்கு மேல் உறுதிக்காணி மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து உடன் தேவை.
**077 410 5294** (AVA/516)(11.17)

**ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்**
**ENGLISH PERSONAL CLASSES**
அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
**T.P:0776589443** யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**
பண்ணை வீதியில் இருந்து இந்து மகளிர் வீதியின் ஊடாக வரும் வழியில் தேசிய அ.அ. (942212860V). பேராதனை மருத்துவபீட பல்கலைக்கழக அடையாள அட்டை, வாகன அனுமதி அட்டை, வங்கி அட்டை என்பன உள்ளடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
**077 429 5907, 077 119 2873**

**ஆற்றுமணல் விநியோகம் தொடர்பானது**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் கொங்கிரீட் தொழிற்சாலைக்கு ஆற்றுமணல் விநியோகம் செய்யக்கூடியவர்கள் கீழ்வரும் தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**யாழ்ப்பாணம் - 077 346 6262**
**கொழும்பு - 076 426 4762**

**சேவைகள்**
"ONLINE"(ஒன்லைன் விசா) விண்ணப்பங்கள் - கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, லண்டன், செங்கன் நாடுகளுக்கான நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், சுவிடன், பெல்ஜியம், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நிரந்தர விசா, தற்காலிக (விசிட்) விசா விண்ணப்பப் படிவங்களும், சத்தியக் கடதாசி வேலைகளும், உடனடியாகவும், முறையாகவும், சரியாகவும் பூர்த்தி செய்து தரப்படும். காலை 7.30 இல் இருந்து மாலை 05.30 வரை தொடர்பு கொள்ளவும். எனக்கு வேறு கிளை அலுவலகமோ உதவியாளர்களோ கிடையாது.
தொடர்பு: திருமதி ஞானேஸ்வரி குமரகுரு. ஜே.பி., (அகில இலங்கை)
SECRETARIAL & ALIED SERVICES
S - 68, 3ஆவது மாடி, கொழும்பு கோலட் சென்ரர்,
(பழைய மாலுக்கடை) கொழும்பு - 11.
தொலைபேசி: 077 375 3791 / 011 2431 725/ 011 313 3945
Viber: 077 2991 482
இமெயில்: gnaneswaryk@gmail.com


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
05 . 12 . 1938



மறைவு
22 . 03 . 2019

**அமரர் வஸ்தியாம்பிள்ளை நிக்கலஸ் சபாரட்ணம்**

இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் அடைக்கலமாதா தேவாலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் அவரது ஆன்மா இளைப்பாற வேண்டி கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.80/3, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் 49ஆம் நாள் நினைவு

அமரர்
**செல்வநாயகம் பீற்றர் யஸ்மின்**

மலர்வு 29.06.1997



உதிர்வு 07.03.2019

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்
இறைவன் தந்த எம் இனிய உறவே ஈரவிழிகளுடன் நினைக்கின்றோம் உம்மை
நாள்கள் 49 இன்றோடு முடிந்தும் மறக்க முடியாது உனது நீண்ட நினைவுகள்
கண்ணீர்க் காணிக்கையுடன் – உன் ஆன்மா இறைவனடி சேர
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஆமென்.

எமது பிள்ளையின் மரணச் செய்தி அறிந்து எம்துயரத்தில் பங்கு கொண்ட அனைத்து உறவுக்ளுக்கும் இந்நாள் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு. நாளை (24.04.2019) புதன்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் ஆன்மசாந்தி ஆராதனையிலும் அன்று மதியம் எமது இல்லத்தில் நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் எம்மோடு கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் வீதி,சுன்னாகம். குடும்பத்தினர்.


**அதிர்ஷ்ட கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 587 | வர்ணம் : இளநீலம் | சீட்டிழுப்பு திகதி: 2019.04.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,138,420/-
வெற்றி இலக்கங்கள் 08 19 37 46 ஆங்கில எழுத்து L
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அவசர தீர்க்க அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 21.04.2019 | வெற்றி வாரம் 2501 | வர்ணம் ஊதா
கும்பம் | வெற்றி இலக்கங்கள் 08 11 30 56
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 33,33,224/=
23.04.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை, சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.பாலஸ்காந்தன் தர்சிகா அவர்களின் பாசமிகு தாயார்

**விமலேந்திரன் தேவநாயகி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம்



மண்ணில் 11.08.1919 விண்ணில் 21.04.2019

ஊறணி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மாரீசன் கூடலை வசிப்பிடமாகவும்கொண்ட வைத்தியாம்பிள்ளை ஞானப் பிரகாசம்(செல்லையா)21.04.2019 ஞாயிற்றுக்கிழமை மாரீசன்கூடலில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாரீசன்கூடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரீசன்கூடல், யாழ்ப்பாணம். (CS/24884)(1.17)

தகவல்: மகன் - ஜோன்சன்

### நாகராசா திருச்செல்வம் (கடைமாமா)

நயினாதீவைப்பிறப்பிடமாகவும் நயினாதீவு - 3 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகராசா திருச்செல்வம் (கடைமாமா) நேற்று (22.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா - நகுலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் சுவந்தினிதேவி (நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் ஆலய ஊழியர்), அமிர்தினி (ஆசிரியர், நயினாதீவு. ஸ்ரீநாகபூசனி வித்தியாலயம்), சுதர்சன் ஐயர் (M.R.M கம்பனி வடமாகாண முகாமையாளர், விநாயகர் பண்ணை உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவகுமார், பார்த்தீபன், மல்லிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெய, சோதிகா, ஹரிசாந், பிரபாலினி, பிருத்தி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு - 03
தொ.பே - 021300 6619
0774014416

தகவல்: குடும்பத்தினர்.





**ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்**
உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி
**IELTS** •Unique Test Tips •Latest course Materials
**IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
**DIPLOMA IN ENGLISH Spoken English**
Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கான மே மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 10.00a.m | Mon,Wed,Fri 10.00 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.
**DMI COMPUTER EDUCATION**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் Tel.: 021-225 5556 |

## மரண அறிவித்தல்கள்



மலர்வு
10
.
03
.
1931

உதிர்வு
20
.
04
.
2019

## சரவணமுத்து கணபதிப்பிள்ளை

மீசாலையைப் பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணை, மட்டுவில் மத்தி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து கணபதிப்பிள்ளை 20.04.2019 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும் சாந்தநாயகி (கனடா),தங்கமலர், அற்புதமலர், கோபாலசிங்கம், தர்மகுலசிங்கம் (நோர்வே), பரராஜசிங்கம் (லண்டன்), ரோவணாதேவி (கனடா), கோணேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற செல்லம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கம்மா காலஞ்சென்றவர்களான செல்லாச்சி முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கராஜா, ஜீவானந்தன், பரமசாமி, சிவராணி, பானுமதி (நோர்வே), முகுந்தினி (லண்டன்), சிறிகுலதேவன் (கனடா), கிருபாகரன் (லண்டன்), சுவைதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிதா, ரோகர், விசாகன், கிருஷ்ணா, கார்த்திகா, சுபாதன், சுபாசன் , தரூசன், கிருபாளினி, கிருஷன், கிருசாந்தன், பிரதீபா, லோபிதா, கிருசாளினி, பிரதீபன், பிரசாந்தன், லக்ஸன், தனுஸ், றதுஸ், மோகீசன், தேவகீசன், ஜெனுஷினி, யசாந், அஜய் ஜொய்சி, ஜோய், ஜெஸ்லி, ஜோஹன்னா, ஜெமிலா, ஜெயம் ஆகியாரின் பாசமிகு பேரனும் பிரதீஸ், மோனிஸ், தேவசுரக் ஷா, தேவலக் ஷிகா, தேவசர்வேஸ், சபீரா, டிவிஷா, ஜனுஸ் , டிவன்ஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக மட்டுவில் மத்தி நெணியன்சின்னத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**மட்டுவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

(CS 24877)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 779 0774/ 077 670 7919**



## திருமதி ஜெயராணி ஆனந்தசபாபதி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, கொள்ளுப்பிட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி ஆனந்தசபாபதி 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஆனந்தசபாபதியின் (ஓய்வுபெற்ற வருமானவரி மதிப்பீட்டு அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரா மற்றும் கமலபூசணி, காலஞ்சென்றவர்களான நாகேந்திரா, காந்திமதி மற்றும் தெய்வேந்திரா, புஸ்பராணி, காலஞ்சென்ற இராஜேந்திரா மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரட்ணசபாபதி, காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, இராசநாயகி, நடனசபாபதி, பார்வதிப்பிள்ளை, தனபாலசிங்கம், ஜெயலக் ஷ்மி, நாகராஜா மற்றும் கீதா, காலஞ்சென்ற வில்வராஜா மற்றும் ஜோர்ஜ் செட்டி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் White House (அந்திமகால சேவை) இல.180, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியை மாலை 3.00 மணிமுதல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**கணவர் - ஆனந்தசபாபதி**

(CS 24881)
(14,17)

**077 558 8470**

## மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் புவனேஸ்வரி (ராசாத்தி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் புவனேஸ்வரி (22.04.2019) திங்கட்கிழமை அதிகாலை கோண்டாவிலில் காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல்: க.திருச்செல்வம்**
**குடும்பத்தினர்.**
**நவரத்தினராசா வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
**021 321 4585**

### திருமதி
## பூரணானந்த குருக்கள் கெங்காசரோஜினி



கோப்பாய் வடக்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணானந்த குருக்கள் கெங்காசரோஜினி நேற்று (22.04.2019) திங்கட்கிழமை நண்பகல் காலமானார்.


அன்னார் மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் கோவில் பிரதம்குரு காலஞ்சென்ற இரத்தின பூரணானந்த குருக்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சித்தாந்தபானு சுப்பிரமணியக்குருக்கள் - இரத்தினசவுந்திர அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சோமசுந்தரக்குருக்கள், பத்மாவதி, சந்திரமௌலிஸ்வசர்மா காலஞ்சென்ற மங்களகௌரி, கிரீசரமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சந்திரானந்த குருக்தள் கீதர்சந்திரக்குருக்கள், சுவர்ணலதா, ஹேமலதா, சுதாகரக்குருக்கள், ஜனகலதா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019)செவ்வாய்க்கிழமை கோப்பாய் வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிறபகல் 4.00 மணிக்கு கோப்பாய் வடக்கு கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கந்தசாமி கோவிலடி,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 322 2784**

## நடராஜா ஜீவராஜா



யாழ். நாவாந்துறை கெனடி வீதியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் La chaux De-Fonds ஐ வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜீவராஜா அவர்கள் 18.04.2019 வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா அன்னமேரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் குணரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், ஜீவனாவின் அன்புத் தந்தையும், மிக்கேலின பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், குமாரசாமி மற்றும் ஜெயராஜா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பெறா மகனும், காலஞ்சென்ற சாரதா மற்றும் இளங்கோவன் (ஜேர்மனி), வாசுகி, சந்திரசேகர், ஜீவராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணகலிங்கம், சிவசுந்தரராசா, சிவஜோதி, அற்புதராசா, தெய்வானை, பவாணி, சிவக்கொழுந்து, இராஜேஸ்வரி, கௌரிமலர், மணிவண்ணன் வானதி, ரமணன், ரேகா லவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைலாவின் பேரனும் ரபேயா, ரபேசன், ரன்ஜா, ரனுசன், டானியல், டர்சினி, ஜீவநதி, ஜீவராசா, ஜீவிதன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், சதீஸ், தேன்மதி, கிருபா, கேதீஸ், ஜெகதீஸ், வாகீஸ், கல்பனா, றதீஸ், ராகேஸ், கவிதா, எமிற்றா, கோபி, அருள் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 24.04.2019 நாளை புதன்கிழமை காலை 9.00 தொடக்கம் 12.00 மணிவரை உள்ள காலப்பகுதியில் RuE-DE -LA.charrier 1022300 La chaux De fonds என்னும் முகவரியில் உள்ள புனித சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இத்தருணத்தில் யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் இருக்கும் சகோதரி வாசுகி (குஞ்சு) அவர்களின் வீட்டில் 24.04.2019 பகல் 12.00 மணியளவில் துக்கம் அனுஸ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: சகோதரர்கள்**

## உலகக் கிண்ணத் தொடர் ஆப்கான் அணி அறிவிப்பு

இங்கிலாந்தில் எதிர்வரும் மே மாதம் இடம் பெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. உலகக் கிண்ணத்துக்கான அணிகளை ஒவ்வொரு நாட்டு அணியும் அறிவித்து வருகின்றன. இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய அணிகள் தங்களது பெயர் விவரங்களை அறிவித்துவிட்டன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் அணியும் தமது அணியை நேற்று அறிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் அணித் தலைவராக குலாம் நபி நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த வேகப்பந்துவீச்சாளர் ஹமித் ஹசன் இணைப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் அணி தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

ஆப்கானிஸ்தான் அணி விவரம்:
குலாம் நபி(அணித் தலைவர்), முகமது ஷாசாத், நூர் அலி ஜத்ரன், ஹஸ்ரத்துல்லா ஜஜாய், ரஹ்மத் ஷா, அஸ்கர் ஆப்கன், ஹஸ்மத்துல்லா ஷாஹிதி, நஜ்புல்லா ஜத்ரன், ஷமிமுல்லா ஷின்வாரி, முகமது நபி, ரஷித் கான், தவ்லத் ஜத்ரன், அப்தப் ஆலம், ஹமித் ஹசன், முஜிப் உர் ரஹ்மான்.

UNIVERSITY of GREENWICH
2019 May Intake

START FOR A NEW ACHIEVEMENT
உலகின் முதன்மையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான University of Greenwich இன் பட்டக்கல்விகள் யாழ்மண்ணில்...
Direct Entry To The Final Year
BSc (Hons)
- Computing
- Computer Systems & Networking

Why should you select IIS ?
- IIS set high standards for teaching quality.
- The lecture panel consist of eminent academic and industry experts.
- Facilities for extracurricular activities.
- Bank loan facilities and easy payment schemes.
- Industrial placement at leading companies.

Pathway
BSc (Hons) in Computer Systems & Networking/ Computing
HND/ BCS Diploma/ Professional Qualifications +Experiance

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
021 222 8060 | 021 4900 900
www.iis.edu.lk | info@iis.edu.lk
PIBT Pioneer Institute of Business & Technology

பேச்சு சிங்களம்
அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர் இளைஞர், யுவதிகள், வயதுவந்தோர் இணையமுடியும்!
முதல் வகுப்பு இலவசம்
சனி,ஞாயிறு பிரிவு1 : காலை 07-08 பிரிவு 2 : 4.30-5.30
ஆங்கிலம்
சனி,ஞாயிறு பிரிவு1 : காலை 08-10 பிரிவு 2 : 10-12
அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்
அனைத்து வகுப்புகளும் ஆரம்பம் : 27.04.2019
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 222 4282
077 621 4567

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு


| | |
|---|---|
| UK | - 600/= |
| Germany | - 700/= |
| France | - 700/= |
| Canada | -1000/= |
| Australia | - 975/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்.
Hotline : 0777 55 45 28

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.


www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்முனைவோருக்கான கருத்தரங்கு
சர்வதேச சந்தைகளை சென்றடைதல்
இடம் : ஜெட்விங், யாழ்ப்பாணம்
காலம்: 27-04-2019 மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை
பிரதம விருந்தினர் : திரு. இ.ஆர்னோல்ட், முதல்வர், யாழ்.மாநகர சபை
சிறப்பு உரை : திரு. டேவிட்ப்ரோக், சிரேஷ்ட பங்காளர், ARQ, மோல்ட்டா
ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் வடஅமெரிக்காவுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்கள்.
வெளிநாட்டில் தொழில் தொடங்குதல் மற்றும் சர்வதேச கொள்வனவாளர்களை கண்டடைவதற்கான ஆலோசனைகள்.
யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்ற ( CCIY ) அங்கத்தவர்களுக்கு இலவசம்.
ஏனையோருக்கு மதிய போசனத்திற்கான கட்டணமாக ரூபா 2,000 அறவிடப்படும்.
குறைந்தளவான பதிவுகளே ஏற்றுக்கொள்ளப்படும்.
பதிவுகளுக்கு : KabilrajK@bbkca.com / 0766860098
பதிவுகளுக்கான முடிவு திகதி : 25-04-2019
BBK PARTNERSHIP CHARTERED ACCOUNTANTS & REGISTERED AUDITORS
149/2A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்


CHOOSE No.1 2018 LATEST
PEARSON PLATINUM PARTNER
Leading to BEng (HONS)
Pearson HND IN BUSINESS MANAGEMENT
Leading to BA (HONS)
Rs. 75,000 DISCOUNT
*Conditions Apply
Pearson HND IN COMPUTING & SYSTEMS DEVELOPMENT
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
DUAL DIPLOMA
DIPLOMA IN ENGLISH
INTERNATIONAL DIPLOMAS
- Diploma in Business Management
- Diploma in Internet Marketing
- Diploma in Computerized Accounting
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Auto CAD
- Diploma in Graphic Designing

DURATION 4 MONTHS
DISCOUNT 25%
OFFER VALID TILL 30. APRIL .2019
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021-7 572 572
SRI LANKA'S LARGEST PRIVATE SECTOR HIGHER EDUCATION NETWORK
CALL : 0776974761

## மரண அறிவித்தல்

### திருமதி தேவநாயகி விமலேந்திரன் (தேவி)

இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவநாயகி விமலேந்திரன்(தேவி) நேற்று (22.04.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சரஸ்வதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விமலேந்திரனின் (இந்திரன் - உரிமையாளர், சரஸ்வதி மில், கொக்குவில்) அன்பு மனைவியும் கஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி.வடக்கு பிரதேசசபை), தர்சிகா (சமுர்த்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலஸ்கந்தன் (HNB, கொடிகாமம்), தர்மிலா (ஆங்கில ஆசிரியை, மன்/இலுப்பைக்கடவை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிவர்ஷி, ரேமிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் தணிகைவாசனின் (ஆஸ்திரேலியா)அன்பு பெரியதாயாரும் காலஞ்சென்ற நேமிநாதன் மற்றும் வேதநாயகி, காலஞ்சென்ற லோகநாயகி மற்றும் தேவநாதன், கலாநாயகி, பிறையணிநாதன், காலஞ்சென்றவர்களான குருபரநாதன், வரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வாமதேவன் (இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி), விமலாதேவி, சதானந்தன் (சரஸ்வதி மில்), காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் ஜெகதீஸ்வரி (கனடா), தர்மினி (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.**

(CS 24877)
(14,17)

**தகவல்:
குடும்பத்தினர்.**

**077 125 2942/ 021 221 9299**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.